01ST MARCH 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 71 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com




## புனித ரமழான் இன்று ஆரம்பம்

(ஏ.எஸ்.எம். ஜாவித்)

ஹிஜ்ரி 1446 ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு பெப்ரவரி 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை

02ம் பக்கம்பார்க்க...

# குற்றச் செயல்கள், தீவிரவாதத்தை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் விரைவில் அறிமுகம்

### பயங்கரவாத தடைச் சட்டமும் நீக்கப்படும்

# பாராளுமன்றில் ஜனாதிபதி அதிரடி!



பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்ற (28) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குற்றச்செயல்கள் மற்றும் தீவிரவாதத்தை தடுக்க புதிய சட்டங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

புதிய சட்டங்களைத் தொகுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

04ம் பக்கம்பார்க்க...

## தேசபந்து தென்னக்கோன் உட்பட அறுவரை கைது செய்ய உத்தரவு

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட ஆறு சந்தேக நபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி மாத்தறை வெலிகம

03ம் பக்கம்பார்க்க...

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உடன் நடவடிக்கை எடுங்கள்



### சஜித் பிரேமதாச அரசுக்கு வேண்டுகோள்

தற்போதைய அரசாங்கம் நாட்டில் இயங்கும் குற்ற செயலில் ஈடுபட்டு வரும் கும்பல் மற்றும் கொலைக்

02ம் பக்கம்பார்க்க...

## நாகூர் ஹனீபாவின் நூற்றாண்டு நிகழ்வினை கொழும்பு நகரில் நடாத்த ஏற்பாடு



உலகறிந்த பாடகர் இசைமுரசு மர்ஹூம் நாகூர் ஈ. எம் ஹனிபாவின் நூற்றாண்டு நிகழ்வை இலங்கையில் ஜூலை மாதத்தில் சிறப்பாக நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் பங்கேற்பதற்காக தமிழகத்திலிருந்து வருகை தந்த நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஆளூார் ஷாநவாஸ், ஊடகவியலாளர் திருச்சி எம்.

02ம் பக்கம்பார்க்க...

## வாக்காளர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் முஸ்லீம் லீக் வாலிப முன்னணி வேண்டுகோள்

2025 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவில் உங்களது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

இப்பொழுதே தேர்தல் ஆணைக்குழு வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர்களை பதிவு செய்திருக்காவிட்டால்

02ம் பக்கம்பார்க்க...

## புதிய கடவுச் சீட்டில் தவறுகள்: மோசடிகளை ஆராய தெரிவுக்குழு நியமிக்கவும்



### பாராளுமன்றில் முஜிபுர் ரஹ்மான் வேண்டுகோள்

தற்போது வழக்கிலுள்ள கடவுச் சீட்டுக்களை அச்சிடுவதில் இடம்பெற்றுள்ள மோசடிகள் மற்றும் அதிலுள்ள தவறுகள் பற்றி ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று பாராளுமன்றத்தில் வேண்டுகோள்

04ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச நாணய நிதியம் நான்காவது கடன் தொகையை வழங்க ஒப்புதல்

### இலங்கைக்கு 336 மில்லியன் அ.டொலர்

சர்வதேச நாணய நிதியம் மூன்றாவது பகுப்பாய்வின் இறுதியில் இலங்கைக்கு நான்காவது கடன் தொகையை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.இதனடிப்படையில் இலங்கைக்கு 336 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக கிடைக்கவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாகக் குழு, இலங்கையின் 48 மாத நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் (EFF)

03ம் பக்கம்பார்க்க...

## மஞ்மா நகர் மயான பூமி விவசாயிகளுக்கு நஷ்டஈடு!

ஒட்டமாவடி மஞ்மா நகர் மயான பூமியில் விவசாயம் மேற்கொண்டுவந்தவர்களுக்கு மாற்று காணி வழங்க நடவடிக்கை எடுப்போம் என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

04ம் பக்கம்பார்க்க...

## சட்டம் ஒழுங்கு நாட்டில் சீர்குலைவு

### சபையில் ஹக்கீம் காட்டம்!

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து இதுவரை 70 க்கு மேற்பட்ட மனிதப் படுகொலைகள் நடந்துள்ளதாகவும் ,

03ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## சட்டம் ஒழுங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும்பல்களை கட்டுப்படுத்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த போதிலும், அரசாங்கம் தனது பணிகளை நிறைவேற்ற முடியாமல் திணறுகிறது. முதுகெலும்பை நிமிர்த்தி, மக்களின் அடிப்படை உரிமைகளை பேணிக் கொண்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான இயன்ற அதிகபட்ச நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் யோசனை முன்வைக்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்கள் எப்போதுமே மேடைப் பேசுக்களுக்கும், மேடைக் கதைகளாலும் ஏமாற்றப்படுகிறார்கள். ஏமாறுகிறார்கள். அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சுக்களுக்கும் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் காணப்படும் இடைவெளியை இப்போதாவது நாட்டு மக்கள் நன்றாக புரிந்து புத்திசாலித்தனமாக தமது அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் விளைவுகளை மக்கள் அனுபவிக்க நேரிடும். தேசிய பாதுகாப்பிற்கு பதிலாக சமூகமே பாதுகாப்பற்ற நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அனுராதபுர நகரில் இன்று (28) காலை அடமஸ்தானத்தை வழிபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் குற்றங்களைத் தடுக்க எதிர்க்கட்சியின் ஆதரவை அரசாங்கம் கேட்பதற்கு முன்னமே நாம் எமது ஆதரவை தெரிவித்து விட்டோம். இந்த அரசாங்கத்திற்கு நாட்டை ஆளும் தொலைநோக்குப் பார்வையும் நோக்கும் இல்லை. மேடைகளில் கனவு உலகங்களை உருவாக்குவதும், நாட்டை ஆள்வது என்பதும் இரு வேறு விடயங்களாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

* மக்களே எமக்கு முக்கியம்!

எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்திக்கு இந்நேரத்தில் உள்ள ஒரே சவால் மக்களை நன்றாக வாழ வைப்பதாகும். மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பேச்சாலும் செயலாலும் மக்களின் துன்பத்தைப் போக்க எம்மாலான சகல வழிகளிலும் முயற்சிப்போம். நடவடிக்கை எடுப்போம். செயல்படுவோம். அன்னிய நேரடி முதலீட்டைக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்ல வேண்டும். அரசாங்கமானது இதனையே ஆற்ற வேண்டும். இதற்கு பாரிய மூலோபாயத் திட்டமொன்று தேவை. அவ்வாறான திட்டம் இந்த அரசாங்கத்திடம் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

* தற்போது அரசியல் பழிவாங்கல்கள் அதிகரித்துள்ளன.

தற்போது பிரதேச செயலாளர்கள், கல்வித்துறைகளில் கடமையாற்றும் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு, ஆளுந்தரப்பினரின் நண்பர்களை அப்பதவிகளில் நியமித்து, அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பெருமளவிலான அரச ஊழியர்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த அரசாங்கமானது, அரச ஊழியர்களை அவமரியாதை செய்து வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

* இவ்வாறே போனால் 2028 இல் கடனை செலுத்த முடியாது.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத் திட்டத்தின் மூலம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13மூ நமது நாட்டின் முதன்மைச் செலவினமாக மாற்றப்பட்டுள்ளது. முதன்மை இருப்பு 2.3 ஆக பேணிச் செல்ல வேண்டும். என்றாலும், இந்த வரம்பு காரணமாக, நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வளங்கள் இழக்கப்படுகின்றது. இதனால், 2028 கடனை அடைப்பது கனவாகவே காணப்படுகின்றது. நாடு இவ்வாறே சென்றால், 2028 இல் எம்மால் கடனை அடைக்க முடியாது. இது தொடர்பான எச்சரிக்கைகள் கூட பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இரண்டாவது கடன் மறுசீரமைக்கு செல்ல வேண்டி நேரிடும் போல் தெரிகிறது. இந்த விடயங்களை மக்களிடம் இருந்து மறைத்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

* விவசாய சங்கத் தலைவர்கள் அமைச்சர்களான பிறகு அரிசி ஆலை முதலாளிகளின் அடிமைகளாக மாறியுள்ளனர்.

இந்நாட்டு மக்கள் குரல்கள் பாராளுமன்றத்தில் சரியாக ஸ்தானப்படுத்தப்படுவதில்லை. 159 பாராளுமன்ற உறுப்பினர்களை நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர். அன்று மேடைகளில் உரத்துப் பேசப்பட்ட விவசாயத் துறைக்கு பெற்றுத் தருவோம் என வாக்குறுதியளித்த விடயங்களை அதிகாரம் கிடைத்த பின்னர் பாராளுமன்றத்தில் பேசாது மௌனம் காத்து வருகின்றனர். விவசாயிகளின் உரப் பிரச்சினை, உத்தரவாத விலையின்மை, இழப்பீடு இன்மை போன்ற விடயங்களில் ஆளுந்தரப்பினர் மௌனம் காத்து வருகின்றனர். இது குறித்து அரசாங்கம் பொருட்படுத்தாது இருந்து வருகிறது. எதிர்க்கட்சியில் இருக்கும் போது வயல்வெளிகளுக்கு இறங்கி, 150 ரூபா உத்தரவாத விலையைப் பெற்றுத் தருவோம், இதனை சட்டமாக்குவோம் என பேசியவர்கள் அமைச்சரானதும் மௌனம் காத்து வருகின்றனர். சபையில் வாய் திறக்கிறார்கள் இல்லை. விவசாய சங்கத் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு அரிசி ஆலை முதலாளிகளின் பணயக்கைதிகளாக மாறியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## புனித ரமழான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதன்போது நாட்டின் எப்பாகத்திலும் தலைப் பிறை தென்படாததால் இலங்கை வாழ் மக்கள் புனித ஷஹ்பான் மாதத்தை நேற்று சனிக்கிழமை மார்ச் 1ஆம் திகதி 30ஆக பூர்த்தி செய்து நேற்று சனிக்கிழமை மஹ்ரிபு தொழுகையுடன் புனித ரமழான் மாதம் ஆரம்பமாகின்றது என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழுவின் தலைவர் மௌலவி எம். பி.எம்.ஹிஸாம் அல்பத்தாஹி உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக்கு குழு உறுப்பினர்கள் முஸ்லிம் சமயம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ். எம். நவாஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் அஸ்ஸெய்க் றிஸ்வி முப்தி, உள்ளிட்ட பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி மொஹமட் ஸாலிகீன், ஸ்ரீ லங்கா ஷரீஆ கவுன்சில் பிரதிநிதிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்ளின் பிரதிநிதிகள் மேமன் சங்க பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## நாகூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கே.ஷாஹுல் ஹமீத் சகிதம் ஸ்ரீ லங்கா மீடியா போரம் தலைவர் என்.எம். அமீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள், ஆர்வலர்களோடு கலந்துரையாடியுள்ளார்.

இரு நாடுகளினதும் கலைஞர்களும்,அரசியல் பிரமுகர்களும் விமரிசையாக நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தமிழ் பேசும் கலை,இலக்கிய முக்கியஸ்தர் ஒருவர் தகவல் தெரிவித்தார்.

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் பிரதேச கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு வாக்காளர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் தலைவர் ஷாம் நவாஸ் இது தொடர்பாக விடுத்துள்ள வேண்டுகோளில் தேர்தல் ஆணையகத்தின் தகவல்களின்படி இவ்வாரம் வீட்டுக்கு வீடாக கிராம உத்தியோகத்தர்கள் வர மாட்டார்கள். ஏற்கனவே பதிவாகாமல் இருக்கின்ற பெயர்களை சேர்த்துக் கொள்வார்கள். புதிதாக பெயர்கள் இருப்பின் உங்களது பகுதி கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறும், வாக்காளர் இடாப்புகளை பதிவு செய்வதில் அசமந்தப்போக்கை கடைப்பிடிக்க வேண்டாம் என்றும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.






## சட்டம் ஒழுங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமும் ஒழுங்கும் சீரழிந்து,நாட்டில் நீதியின் ஆதிபத்தியம் பாரிய சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட விவாத வாக்கெடுப்புக்கு முன்னர் , செவ்வாய்க்கிழமை(24)சில முக்கிய விடயங்கள் தொடர்பில் நீண்ட உரையொன்றை ஆற்றியபோது ,படுகொலைச் சம்பவங்களையும் மையப்படுத்தி அவர் கூறியதாவது,

இந்த சபையில் நீதியமைச்சரும் இருப்பதன் காரணமாக, ஒரு முக்கிய விடயத்தைப் பற்றிக் கூற வேண்டும். இன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர் தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டினார் .தேசிய பாதுகாப்பு என்பதைவிட , பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து மனித படுகொலைகள் 70 க்கு மேல் நடந்துள்ளன. இது சம்பந்தமாக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன ?

கனேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்துக்குள் சுட்டுக் கொல்லப்பட்டு 48 மணி நேரத்துக்குள் , கைது செய்யப்பட்ட இருவரை பொலீசார் கொன்றுள்ள னர் .இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.இதுபோன்ற விடயத்தில் ஜனாதிபதி அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்தபோது கூறியவை இப்பொழுது சமூக வலைத்தளங்களில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை சுட்டு விட்ட பின்னர் ,சிறு பிள்ளைகள் சண்டையிடும் பொழுது மாற்றிக் கூறுவதைப் போலாவது சொல்லுங்களேன் என எதிர்க்கட்சியில் இருக்கும் பொழுது அரசாங்கத்திற்குச் சொல்லிச் சிரித்தார். இப்பொழுது அவரது அரசாங்கத்திலேயே அது நடைபெறுகின்றது.

நேற்று ,இலங்கை சட்டமன்றம்(Bar Association of Sri Lanka) பதில் பொலிஸ்மா அதிபருக்கு(Acting IGP) வற்புறுத்தி கூறியுள்ள விடயம் என்னவென்பது நீதி அமைச்சருக்குத் தெரியுமா ?

அதாவது , கொலைகள் :அதிகரித்துவருவதை தடுத்து நிறுத்துவதற்கு சட்டத்துக்குப் புறம்பான இவ்வாறான கொலைகள் ஒரு தீர்வாக மாட்டாது என்றும், அரசாங்கம் சட்டத்தின் ஆட்சிக்கு கட்டுப்பட்டு நடந்தால் மட்டுமே இவ்வாறான பாரிய குற்றச்செயல்களை முடிவுக்கு கொண்டு வரலாம் என்றும் இலங்கை சட்ட மன்றம் ,பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு வலியுறுத்திக் கூறியுள்ளது.இந்த

விடயத்தில் பாரபட்சமற்ற விசாரணையை உடனடியாக மேற்கொள்ளுமாறும் இலங்கை சட்டமன்றம் பதில் பொலிஸ் மாஅதிபரைக் கேட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் 2023 ஆம் ஆண்டு ,கைது செய்யப்படுபவர்களின் விடயத்தில் பொலிசார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை வழங்கி உத்தரவிட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் அந்த ஆணை ஏன் பின்பற்றப்படுவதில்லை?

எவ்வளவு பாரதூரமான குற்றச் செயலைப் புரிந்தாலும், கண்டபடி இவ்வாறு எவரையும் சுட்டுக் கொல்ல முடியாது .தப்பியோட முற்படுபவரைச் சுட்டுவிட்டு, அல்லது பதுக்கி வைத்திருக்கும் போதை பொருளை காட்டுவதற்கு அல்லது ஒளித்து வைத்திருக்கும் ஆயுதத்தை கண்டுபிடிப்பதற்கு என்று கூட்டிக்கொண்டு போய், பின்னர் தங்களிடம் இருந்த ஆயுதத்தை பறிக்க முற்பட்டார் எனக் கூறி இவ்வாறு சுட்டுத் தள்ள முடியாது.

நீதியின் ஆதிபத்தியத்திற்கு பாரிய சவால் ஏற்பட்டிருப்பதை நினைவூட்டுகின்றேன் .
நேற்று பிரதமர் இந்த சபையில் பேசும் பொழுது பாதாள உலகத்தினரை ஒழித்து கட்டி விடலாம் என்று கூறினார் . பாதாள உலகத்தினரின் கரங்களில் உள்ள ஆயுதங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதாவது இவர்களுக்குச் தெரியுமா?

எத்தனையோ குழுக்கள் வன்செயல்களில் ஈடுபட்டன. அரசாங்கத்தில் இருப்பவர்களும் ஒரு காலத்தில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் தான். தேசப்பற்றாளர்களின் மக்கள் இயக்கம் என்று கூறிக்கொண்டு ஆயுதங்களை முன்னர் பறித்தெடுத்தவர்கள் இருக்கிறார்கள் ஆயுதக் களஞ்சியங்களில் ஆயுதங்களை கொள்ளையடித்தவர்கள் இருக்கிறார்கள் .

சட்ட பூர்வமான ஆயுதங்களை விட,சட்ட விரோத ஆயுதங்களைக் கொண்டே படுகொலைச் சம்பவங்கள் அதிகமாக நடக்கின்றன .அவற்றை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுங்கள் என்றார்.

## சர்வதேச நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது.

மூன்றாவது மதிப்பாய்வின் மூலம் 336 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி வசதி நான்காவது தவணையாக இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இதன் மூலம், சர்வதேச நாணய நிதியம் இன்றுவரை இலங்கைக்கு வழங்கிய மொத்த நிதி உதவி 1.34 பில்லியனை எட்டியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இலங்கையின் செயல்திறன் வலுப்பெற்றுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

சமூக செலவினங்களுக்கான குறியீட்டு இலக்கைத் தவிர, 2024 டிசம்பர் இறுதிக்கான ஏனைய அனைத்து அளவு இலக்குகளும் எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

2025 ஜனவரி இறுதிக்குள், பெரும்பாலான கட்டமைப்பு அளவுகோல்கள் சிறிது தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டன அல்லது செயல்படுத்தப்பட்டதாகவும் அண்மையில் முடிவடைந்த கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள், கடன் நிலைத்தன்மையை நோக்கிய பயணத்தின் வெற்றிகரமான விளைவாகும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.



அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் புத்தளம் மாவட்ட கிளையின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களின் நினைவு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (23) மாலை புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் மஹ்மூத் ஹஸரத் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுத்துக்கொண்ட படம்.

## தேசபந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெலேன பகுதியில் உள்ள உணவகத்துக்கு முன்னால் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பிலேயே தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2025 MARCH 01 - SATURDAY

WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அருள் நிறைந்த ரமழானை திட்டமிடுவோம்

இவ்வருட ரமழானை அடைந்து கொள்ளும் பாக்கியத்தையும் அல்லாஹ் எமக்கு அருளியுள்ளான். கடந்த வருடம் ரமழானை அடையும் போது நாம் பல்வேறு திட்டங்களை வகுத்தோம்.

ரமழானின் அரும் பாக்கியங்களை அடைந்து கொள்வதற்கு எத்தனங்கள் பல எடுத்தோம்.

இருப்பினும், ரமழான் கழிந்து ஷவ்வால் தலைப்பிறை கண்டவுடன் கைசேதப்பட்டோம்.

கடந்த வருடம் எம்மால் முன்னெடுக்க முடியாமல் போன நற்கருமங்களை ஒரு முறை மீள்பரிசீலனை செய்வோம். அடைய முயற்சித்த நன்மைகளை அடைய முடியாமல் போனதற்கான காரணங்களை அடையாளம் காண்போம். எம்மை வந்தடைந்துள்ள ரமழானை நல்ல முறையில் வரவேற்று வழியனுப்ப பிரயத்தனம் எடுப்போம்.

ரமழானை அடைந்து கொண்டு அதன் மூலம் பாக்கியம் பெறாதவர்கள் அழிந்து போகட்டும் என்ற வானவர்களின் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களின் பிரார்த்தனையும், உத்தம நபியின் அப்படியே ஆகட்டும் என்ற பதிலும் எமது சிந்தனையைத் தூண்ட வேண்டும்.

எனவே, எம்மை அடைந்துள்ள இந்த ரமழானை சிறந்த முறையில் அமல்களினால்

சிறப்பிப்போம். இந்த மாதம் பல்வேறு சிறப்புக்களுக்குரிய மாதமாக விளங்குகின்றது.

அந்தவகையில், ரமழான் மாதம் அல்குர்ஆனின் மாதம். இதில் அல்குர்ஆனை அதிகம் ஓதுவோம். அதனை முடிந்தளவு மனனமிடுவோம். மனித வாழ்வின் பிரச்சினைகளுக்கான தீர்வாக அருளப்பட்ட அல்குர்ஆனின் வசனங்களை விளங்குவதற்கு முயற்சிப்போம்.

அதனை ஏனையோருக்கும் எத்திவைக்க நடவடிக்கை எடுப்போம்.

ரமழான் மாதம் ஸதகா, தர்மங்களின் மாதமாகும். நபியவர்கள் இந்த ரமழானில் வீசும் புயல் காற்றை விட அதிகமாக தர்மம் செய்துள்ளதாக நபிமொழிகள் எடுத்துக் கூறுகின்றன.

மறுமை நம்பிக்கை உறுதியாகவுள்ளவர்களின் பண்பாக இஸ்லாம் தர்மத்தை குறிப்பிடுகின்றது. நாம் இவ்வுலகில் கொடுப்பது மட்டுமே மறுமையில் எமக்கு எஞ்சுகின்றது

என்ற சிந்தனை நபியவர்களின் வாழ்க்கைப் பாடமாகும்.

ரமழான் தக்வாவின் மாதமாகும். ஏனைய காலங்களில் ஹலாலான உணவு பானங்களைக்கூட, குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கு ஹராமாக்கி நடைமுறையில் தக்வாவுக்கான பயிற்சியை இந்த ரமழான் வழங்குகின்றது. அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற

உணர்வை ஒரு மாத காலத்துக்கு ரமழான் ஒருவருக்கு வழங்குகின்றது. தனிமையில் இருந்த போதும் தாகித்த நிலையில் உள்ள ஒரு நோன்பாளி தண்ணீர் அருந்தாமல்

தவிர்ந்து கொள்கின்றான். அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு ஒன்று மட்டுமே இதற்குக் காரணமாகும்.

ரமழான் நல்லமல்களின் மாதமாகும். ரமழானில் புரிகின்ற ஒரு ஸுன்னத்துக்கு ஒரு பர்ளுடைய நன்மையையும், ஒரு பர்ளுக்கு எழுபது பர்ளுகளுடைய நன்மையையும் அல்லாஹ் வழங்குகின்றான்.

இப்படியாக நிறைவான அருள்களை சுமந்து வந்துள்ள இப்புனிதமிகு மாதத்தில், நோன்பு நோற்று நன்மைகளை அதிகம் செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று சுவனம்

நுழைவதற்கு முயற்சிப்போம். அதற்கான திட்டங்களை வகுத்து எமது நேரத்தை ஒதுக்கிக் கொள்வோம்.

## மஜ்மா நகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (27) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் தனது கேள்வியின்போது,

கொவிட் தொற்றில் மரணித்தவர்களை அடக்கம் செய்யப்பட்டுள்ள ஓட்டமாவடி மஞ்மா நகர் மிகவும் வறுமையான சுமார் 300 குடும்பங்கள் வாழும் பிரதேசமாகும். இந்த பூமியை கைப்பற்றியதன் மூலம் அங்கு விவசாயம் மேற்கொண்டுவந்த காணி உரித்து பெற்றவர்களும் அசாதாரஹண நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். அதனால் காணி உரித்துடைய சிலர் தங்களுக்கு இதற்கு இதற்கு மாற்று காணி வழங்குமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அதனால் அந்த பிரதேசத்துக்கு அண்மித்த பகுதியில் இருக்கும் அரச காணியில் இருந்து இவர்களுக்கு மாற்று காணி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என கேட்கிறேன் என்றார்.

அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

ஓட்டமாவடி மஞ்மா நகர் மயான பூமி, அரசாங்கத்துக்குரிய பூமி பிரதேசமாகும். அதில்தான் சிலர் விவசாயம் மேற்கொண்டு வந்துள்ளனர். என்றாலும் அந்த மக்களுக்கு மாற்று காணி வழங்குவதற்கு எந்த பிரச்சினையும் இல்லை. அதேபோன்று அங்கு அமைக்கப்பட்டிருக்கும் யானை வேலியை மயானத்தை பூரணமாக சுற்றி அமைப்பதற்கு சுற்றாடல் அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க முடியும்.

மேலும் கொவிட்19 பெருந்தொற்றினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கு பொருத்தமான இடமாக அடையாளம் காணப்பட்ட மட்டக்களப்பு மஞ்மா நகர் மயானமானது அடுகாடுகள் சுடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் கோரளைப்பற்று கிழக்கு மாகாண ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உரித்தானதாகும். இதன் பரப்பளவு 10 ஏக்கராகும். இந்த காணி அரசாங்கத்துக்கு உரித்தானதாகும். அதனை முறையாக அரசாங்கத்துக்கு சுவீகரித்துக்கொள்ள தேவையான நடடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரளைப்பற்று பிரதேச செயலாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. காணியை கைப்பற்றிக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டும். என்றாலும் மேற்படி காணி சுவீகரிப்புக்கான நட்ட ஈடு வழங்கப்படவில்லை.

மேலும் மயானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மத்திய அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்படவில்லை. என்றாலும் பிரதேச சபையினால் அதன் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2021, மார்ச் 5ஆம் திகதியில் இருந்து 2022 மார்ச் 5ஆம் திகதிவரை 3634 கொவிட் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அதற்காக தனிப்பட்ட ரீதியில் 34 இலட்சத்து 27500 ரூபா நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேபோன்று கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள நிதா அரச சார்பற்ற அமைப்பினால் பாதுகாப்பு மதில் அமைப்பதற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தனர். பேருவளை சைனாபோட்டைச் சேர்ந்த ஜவாஹிர் ஹாஜியாரின் சொந்தப்பணத்தில் மயான பூமிக்கு வந்து செல்பவர்கள் தங்கிவிட்டு செல்ல கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

மயான பூமியை சுற்றி யானை வேலி மற்றும் மின்சார விநியோகம் கொழும்பு அப்ஸால் மரிக்காரின் நிதி நன்கொடையால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று கண்டி முஸ்லிம் பள்ளிவாசல் சம்மேளனத்தினால் அங்கு அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜே.சி,பி, இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டிருக்கின்றன என்றார்.

## குற்றச் செயல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) இரத்து செய்யப்படும் என்று, நீதி அமைச்சரும் மன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதாள உலகமும் சில துறைகளும் அரசைக் கட்டுப்படுத்தும் ஒரு வலையமைப்பை உருவாக்கியுள்ளன. கடந்த காலத்தில் அனைத்து அரசாங்கங்களும் பாதாள உலக நபர்களால் கட்டுப்படுத்தப்பட்ட இந்த வலையமைப்பிற்கு அடிபணிந்தன, ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கள் அடிபணியப் போவதில்லை மாறாக சவால்களுக்கு முகங்கொடுக்கும். நாட்டில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் இடமளிக்கப்போவதில்லை.

அண்மைய காலங்களில் மாத்திரம் வெவ்வேறு பகுதிகளில் 06 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. லசந்த விக்ரமதுங்க கொலை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சம்பவங்கள் தொடர்பாக விரைவில் புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்படும். இருப்பினும், தகவல்களை நாங்கள் இப்போதே வெளியிட போவதில்லை. அவ்வப்போது தகவல்களை வெளியிடுவது சந்தேக நபர்கள் தப்பிக்க உதவும்” என்று ஜனாதிபதி கூறினார்

## புதிய கடவுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதியொதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போது புதிதாக அச்சிடப்பட்டுள்ள கடவுச் சீட்டில் பல்வேறு தவறுகள் இருக்கின்றன. இவ்வாறானதொரு நிலையில் இன்னும் பல இலட்சக்கணக்கான கடவுச் சீட்டுக்களை அச்சிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சர்வதேச தரத்துக்கு ஈடானதாக கடவுச் சீட்டுகள் அமைய வேண்டும். ஆனால் இந்த கடவுச் சீட்டில் நிறைய தவறுகள் பிழைகள் இருக்கின்றன. தற்போதைய அரசாங்கம் ஐந்து மாத காலமாக பதவியிலிருந்தாலும் இது பற்றிஅவர்கள் கவனம் சேலுத்தாமல் இருப்பது கவலைக்குரியது. இந்த நிலையில் இந்த மோசடிகள் குறித்து கண்டறிவதற்காகாகவும் பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.



# அரச பாடசாலைகளில் வகுப்பறை கட்டிட நிர்மாணத்துக்கென சொந்த நிதியிலிருந்து 100 கோடி. கலாநிதி பாத்திமா சலீம்





(அஷ்ரப் ஏ சமத் )

இலங்கையில் உள்ள அரச பாடசாலைகள் பௌதீக வசதி குறைந்த பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக எனது குடும்ப சொந்த நிதி 100 கோடி ஷரூபாய்களை துபாய் சயிதா பவுண்டேஷன் ஊடாக ஒதுக்கி யுள்ளோம். இத் திட்டங்களை இலங்கைக்கு பொறுப்பாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நவ்சர் பௌசி முன்னெடுத்துச் செல்வார்.

துபாயிலிருந்து 15 பாடசாலை களுக்கான நிர்மாணப்பணிகள் திறந்து வைப்பதற்காக வருகை தந்த பேராசிரியர் கலாநிதி பாத்திமா சலீம் இதனை தெரிவித்தார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு சயிதா பவுண்டேசனின் கவுன்சில் உறுப்பினர் கலாநிதி பாத்திமா சலீம் மற்றும் அவரது கணவர் அதில் ஆகியோர்கள் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி மற்றும் நவ்சர் பௌசி கியோர்களுடன் இதுவரை இலங்கையில் மூவினங் களையும் சேர்ந்த 40 அரச பாடசாலை களுக்கு 100 கோடி ரூபா செலவில் வகுப்பறை கட்டிடங்கள் நிர்மாணம், பாடசாலைகள் புனர்நிர்மாணம், கூட்ட மண்டபம், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், பாடசாலையின் முன் தோற்றம் சுவர் வடிவமைப்பு என பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள்.

இதுவரை 20 பாடசாலைகளுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் திறந்து வைத்து பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன. எனது தந்தையும் எனது குடும்பங்கள் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட சயீடா திட்டங்கள் இலங்கையில் எனது உறவினரான நவ்சர் பௌசி ஊடாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. எங்களது விருப்பம் அரச பாடசாலைகளுக்கு இவ் அபிவிருத்தி செய்வது கல்வியில் இலங்கையில் உள்ள சகல மத பிள்ளைகளும் முன்னேற வேண்டும். இன,மத நிற மொழிகளுக்கு அப்பால் சகல சமூகங்களும் பாடசாலைகளுக்கும் எங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் சென்றடைய வேண்டும்.

மேலும் எனது தாய் கல்வி கற்ற கொழும்பு புளுமெண்டால் பாடசாலையில் இரண்டு மாடி வகுப்பறைக்கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டு அதற்கு பரிதா கட்டடம் என பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "திறனொளியின் முத்துக்கள்" கவிதைத் தொகுப்பு நூலுக்கு கவிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

( ஐ. ஏ. காதிர் கான் )

"திறனொளி" கலை கலாசார ஊடக வலையமைப்பு, கடந்த 10 வருடங்களாக கலை, இலக்கியம், சமூகம், கல்வி மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் பலதரப்பட்ட சமூக நலப் பணிகளைச் செய்து வருகிறது.

"திறனொளி" கலை மன்றம், இதுவரையும் 17 சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலமாக, பல எழுத்தாளர் களினதும் கவிஞர்களினதும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டு, அவர்களுடைய எழுத்தாற்றலை மென்மேலும் வளர்த்துக் கொள்ள பெரும் பங்காற்றி வருகிறது. அதுமாத்திரமல்லாது, நாடளாவிய ரீதியில் உள்ள பல்துறை சார்ந்த கலைத் திறமையாளர்களை இணைத்து "Thiranoli Art Forum" ஆக இயங்கி வருவதாக, "திறனொளி" மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் "சுவதம்" அறிவிப்பாளர் ஏ.சீ. நௌஷாட் தெரிவித்தார்.

இந்த மன்றத்தின் மற்றுமோர் வெளியீடாக, கவிதைத் துறையில் கால் தடம் பதித்துள்ள இளம் கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், "திறனொளி யின் திறமைக்கான தேடல்" எனும் தொனிப்பொருளில் "திறனொளியின் முத்துக்கள்" எனும் கவிதைத் தொகுப்பு நூலையும் விரைவில் வெளியிடவுள்ளது.

இதற்காக, நாடளாவிய ரீதியில் இருக்கும் கவிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் யாவும், இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும், 0777 113 963 என்ற இலக்கத்துடன் அல்லது thiranoliacmn@gmail.com என்ற ஈ-மெயில் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியுமெனவும், "திறனொளி" மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் ஏ.சீ. நௌஷாட் மேலும் தெரிவித்தார்.

## பலகத்துறை சாதனையாளர்களுக்கு கௌரவம்!




பலகத்துறை மண்ணில் பிறந்து பல துறைகளிலும் திறமை காட்டும் சாதனையாளர்களைப் பாராட்டி விருதுகள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ( 23) போருத்தொட்ட அல்-பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

போருத்தொட்ட சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் அப்துல் அஸீஸ் அவர்களின் ஏற்பாட்டில் நடந்த இந்த வைபவத்தில் டாக்டர் சப்னி அஜ்பர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் வரை கௌரவிக்கப்பட்டார்கள். மத்ரஸாக்களில் மௌலவிப் பட்டம் பெற்றவர்களும் ஹாபிழ்களும் கௌரவிக்கப் பட்டார்கள். ஊடகத்துறையில் நான்கு தசாப்தங்கள் சிறப்பாக பணியாற்றிய எம். ஜே. எம். தாஜுதீனுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கப் பட்டது.

இந்த நிகழ்வில் அல் -ஜென்னா விசேட தேவையுடையோ நிலையத்தின் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலைஞர்களுக்கு சுவதம் விருது





(இஸட்.ஏ. றஹ்மான்)

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதமாக வருடாவருடம் கலைஞர் சுவதம் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலைஞர்களான இஸட் .அப்து றகுமான், எம். சீ.ஜெசீமா மற்றும் ஹை.அப்சா ஆகிய மூன்று பேருக்கும் 2024 ம் ஆண்டுக்கான கலைஞர் சுவதம் விருது வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பீ.ரீ.இர்பான் தலைமையில் மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான் மற்றும் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.றஜாயா ஆகியோரின் நெறிப்படுத்தலில் (25) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிறம கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்.

இன் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், முஸ்லிம் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.அஸ்றப் மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## நொச்சியாகமவில் நிர்மாணிக்கப்பட்ட பராமரிப்பு நிலைய கட்டிடம் திறந்து வைப்பு




(எம்.ரீ.ஆரிப்)

நொச்சியாகமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் குழந்தை பராமரிப்பு நிலையத்தின் கட்டிடம் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச வினால் திறந்த வைக்கப்பட்டுள்ளது.இதுவரை நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு நிரந்தர கட்டிடம் இல்லாததனால் தனியார் நிறுவனக் கட்டிடங்களில் தற்காலிகமாக அலுவலகம் இயங்கி வந்தது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாகாண சபை நிதியியல் இருந்து 220 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நிரந்தர அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதன் மூலம் நொச்சியாகம அதிகார வரம்பிற்குள் மிகவும் சம்பிரதாய முறையில் தமது கடமைகளை மேற்கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்துள்ளதுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பலாகல நெல்லியகம ஜூம்ஆப் பள்ளிவாசல் பிரதான பேஷ் இமாம் முவாத் மர்சூக் அந் நயீம் பவுண்டேசன் நிறுவனத்திடம் விடுத்த வேண்கோளுக்கிணங்க குவைத் நாட்டின் உதவியுடன் கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை அதன் பணிப்பாளர் அஷ்ஷேஹ் றிபாய் (ரஹ்மானி) மற்றும் வித்தியாலய அதிபர் ஐ.இம்ரான் ஆகியோரினால் (26) திறந்து வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படங்கள் :- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

# ரஷ்யாவுடன் அமெரிக்கா கைகோர்க்கும் நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் அதிர்ச்சி...

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)





சௌதி அரேபியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ரஷ்யா மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு உக்ரேன், ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வர உத்யோக பூர்வமான யோசனையை முன் மொழியைப் பட்டது. ஆனால், இந்த ஆரோக்கியமான பேச்சு மேசையில் உக்ரைன் நாட்டை சேர்ந்த பிரதிநிதிகள் யாரும் கலந்து கொள்ளாதது சர்வதேச சமூகத்தை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது என்பதே உண்மையாகும்.

சௌதி அரேபியாவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா - ரஷ்யா இடையே 3 விஷயங்கள் ஒப்புக்கொள்ளப் பட்டதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவ் கூறினார்.அவரது கூற்றுப்படி, முதலாவதாக இரு நாடுகளும் விரைவில் ஒருவருக்கொருவர் தூ தர்களை நியமிக்கும். தூதரகங்களுக் கான வங்கி பரிமாற்றங்கள் மீதான கட்டுப்பாடுகள் உட்பட இரு நாடுகளுக்கும் இடையேயான ராஜ தந்திர பணிகளுக்கான தடங்கல்கள் நீக்கப்படும். அப்படி ஒரு சூழல் உருவாகும் நிலையில் , புற அழுத்தங்கள் நீங்கி போர் முடிவுக்கு வர கூடியதாக ஒரு நிலைதான் அதுவாக இருக்கும் .
இரண்டாவதாக, யுக்ரேனுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு தேவையான செயல்முறைகள் தொடங்கப்படும் என்றும், இதற்காக அமெரிக்கா அதன் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்றும், அதன் பிறகே ரஷ்யா அதன் பிரதிநிதிகளை நியமிக்கும் என்றும் செர்கே லாவ்ரோவ் கூறினார். இந்த கருத்தினை ரஷ்யா தெளிவாக கோடிட்டுக் காட்டி உள்ளதன் வாயிலாக அமெரிக்கா நாட்டிற்கு ஒரு விடயத்தை பகிர்ந்து உள்ளது என்பதே யதார்த்தமான நிலையாகும். ஏனெனில், அமெரிக்கா, ரஷ்யா ஒன்றாக அமரும் மேசையில் இது போன்ற நிகழ்வுகள் ஏறபுடைய ஒன்றுதான்.
மூன்றாவதாக, பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே முழு ஒத்துழைப்பைத் தொடங்கவும், மேம்படுத்தவும் தேவையான சூழல் உருவாக்கப்படும்.இது மிகவும் பயனுள்ள பேச்சுவார்த்தையாக இருந்தது. நாங்கள் ஒருவருக்கொருவர் சொல்வதைக் கவனித்துக் கேட்டோம்', என்று ரஷ்யா வெளிவிவகார துறை அமைச்சர் லாவ்ரோவ் கூறினார்.
அதே சமயம் இந்த பேச்சுவார்த் தைகள் அமைதியை கொண்டுவரும் என கனவு காண்கிறோம். இது ஒரு முதல் படி. ஒருவேளை இது நமது பொருளாதாரத்துக்கு உதவக்கூடும். அவர் கூற்றின்படி இதற்கு மேல் போர் செய்ய முடியாது என்பதை ரஷ்யா வெளிப்படையாகவே கூறி உள்ளதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. அதேநேரத்தில் உணவு மற்றும் பிற பொருட்களின் விலை இங்கு தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அதற்கு சிறப்பு ராணுவ நடவடிக்கை மற்றும் பொதுவான சர்வதேச சூழல் ஒரு காரணம்" என்கிறார் அவர். அதாவது ரஷ்யாவின் வெளிவிவகார துறை அமைச்சர் நாட்டில் காணப்படும் அசாதாரண நிலையை தெளிவுபடுத்தி உள்ளார். இந்த அசாதாரண சூழ்நிலை இரண்டு நாடுகளை தாண்டி சர்வதேச அளவில் விலைவாசி உயர்வுக்கும், பொருளாதார மந்தநிலை உருவாக கூடிய ஒரு காரணியாக இருக்கிறது என்பதை ரஷ்யா நன்கு உணர்ந்து இருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

உலகின் மிகப்பெரிய இராணுவ சக்திகளான ரஷ்யா அதிபர் புதினும், டிரம்பும் கடந்த பிப்ரவரி 12 திகதி அன்று தொலைபேசியில் பேசினர். ஒன்றரை மணிநேரம் நீடித்த இந்த உரையாடலில், யுக்ரேன் போரை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தை களை தொடங்க இரு நாட்டு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். அதன் பின்னர், அவர்களது குழுவினர் பிப்ரவரி 18 அன்று சௌதி அரேபியாவில் சந்தித்துள்ளனர். அதிபர் அளவில் பேச்சுவார்தை விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்த பேச்சுவார்த்தைக்கு உகந்த நாடாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுத்த நாடு தான் சவூதி அரேபியா ஆகும். தங்கள் நாட்டில் இந்த பேச்சு வார்த்தையை நடத்த வேண்டும் என சீனா, ஐக்கிய அரபு கூட்டாட்சி விருப்பம் தெரிவித்த நிலையில் இறுதியாக சவூதி அரேபியா வைத்து தான் இந்த பேச்சு வார்த்தையை நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.
ரஷ்யா - உக்ரைன் இடையிலான மோதல் குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறுகையில், 'ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறேன். ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும், உக்ரைன் பிரதமர் ஜெலென்ஸ்கியும் ஒன்று சேர வேண்டும்.
இரு தரப்பிலும் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். இரு நாடுகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற விரும்புகிறேன். இந்த போரானது அமெரிக்காவை நேரடியாக பாதிக்கவில்லை என்றாலும், ஐரோப்பிய நாடுகளை ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் வெகுவாக பாதிக்கிறது. அமெரிக்கா 300 பில்லியன் டாலரும், ஐரோப்பா 100 பில்லியன் டாலர்களும் முதலீடும் செய்துள்ளோம். உக்ரைனுக்கு முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பணம் கொடுத்தார்.
நமது நாட்டின் பணத்தை வெகு தொலைவில் உள்ள ஒரு நாட்டிற்குச் செலவிடுகிறோம். முந்தைய பைடன் அரசு எங்களது அரசை சிக்கலில் ஆழ்த்தி உள்ளது. மத்திய கிழக்கில் நடக்கும் போரையும் முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறோம் என்று அவர் கூறினார்.
நமது நாட்டின் பணத்தை வெகு தொலைவில் உள்ள ஒரு நாட்டிற்குச் செலவிடுகிறோம். முந்தைய பைடன் அரசு எங்களது அரசை சிக்கலில் ஆழ்த்தி உள்ளது. மத்திய கிழக்கில் நடக்கும் போரையும் முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறோம்.
நமது நாட்டின் பணத்தை வெகு தொலைவில் உள்ள ஒரு நாட்டிற்குச் செலவிடுகிறோம். முந்தைய பைடன் அரசு எங்களது அரசை சிக்கலில் ஆழ்த்தி உள்ளது. மத்திய கிழக்கில் நடக்கும் போரையும் முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறோம் என்று ட்ரம்ப் கூறினார்.
உக்ரைன் போரால் அமெரிக்காவின் பணம் தேவையின்றி செலவிடப் படுவதாக டொனால்ட் டிரம்ப் நினைக்கிறார். இதனால் ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்தும் பணியை தீவிரமாக தொடங்கி உள்ளார் டொனால்ட் டிரம்ப். எதிரி நாடாக என்றாலும் கூட ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் தொலைபேசியில் டொனால்ட் டிரம்ப்பே பேசினார். அதன் பிறகு அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ மற்றும் ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உள்ளிட்டவர்கள் சவுதி அரேபியாவில் சந்தித்து போர் நிறுத்தம் பற்றி பேசியுள்ளனர். இந்த பேச்சுவார்த்தையில் போரில் பாதிக்கப்பட்ட உக்ரைனுக்கு அழைப்பு என்பது விடுக்கப்பட வில்லை. இதன்மூலம் உக்ரைனை மொத்தமாக புறக்கணித்துள்ளார் டிரம்ப். மேலும் டிரம்ப் முயற்சியால் விரைவில் ரஷ்யா - உக்ரைன் போர் என்பது முடிவுக்கு வரும் நிலை உள்ளது.
அதே சமயம் சீனா உடன் நெருங்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லாத நிலையில் இரண்டு எதிரிகளை ஒரே சமயத்தில் சந்திப்பதை விட அவர்களுக்கு இடையேயான நட்புறவில் விரிசலை உருவாக்க அமெரிக்காவின் ராஜ தந்திர நடவடிக்கை சார்ந்த ஒன்று என்பதில் ஐயமில்லை என்பதே சர்வதேச முகாமையாளர்களின் கருத்தாக இருக்கிறது. தைவான் பிரச்சினையில் சீனாவின் அழுத்தத்தை சமாளிக்க ரஷ்யாவின் எதிர்ப்பை முனை மழுங்கி போக வைக்கும் அமெரிக்காவின் நடவடிக்கையாகவும் இது பார்க்கப்படுகிறது .
இதற்கிடையில் 1945 ம் ஆண்டு நாஜி ஜேர்மனியை தோற்கடித்ததன் கொண்டாட்டமாக மே 9 அன்று ரஷ்யாவில் அணிவகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த விழாவானது உக்ரைன் மீதான தனது படையெடுப்பை நியாயப்படுத்துவ தாகவும் இருக்கும் என கூறப்படுகிறது. இதன் தொடர்புடைய விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் பங்கேற்பார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. 2022 பிப்ரவரி மாதம் உக்ரைன் மீது படையெடுப்பை முன்னெடுத்த ரஷ்யாவில் முதல் முறையாக அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் விஜயம் செய்ய இருக்கிறார். இதனால், உக்ரைன் தொடர்பில் அவர் ரஷ்யாவை மறைமுகமாக ஆதரிக்கிறார் என்றே கூறுகின்றனர். ரஷ்யா முன்னெடுக்கும் வெற்றி தினம் என்பது தங்களின் இராணுவ வலிமையை உலகிற்குக் காட்டுவதற்கான ஒரு வழியாகும். கடந்த ஆண்டு உக்ரைன் ட்ரோன் தாக்குதலுக்கு பயந்து வெற்றி தின கொண்டாட்டங்களை வெறும் 7 நிமிடங்களில் விளாடிமிர் புடின் முடித்துக் கொண்டார். ஆனால் இந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியை முதன்மை விருந்தினராக ரஷ்யா அழைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.
இதற்கிடையில் , உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் மக்கள் செல்வாக்கு வெறும் 4 சதவிகிதம் மட்டுமே என கடுமையாக விமர்சித்த ஜனாதிபதி ட்ரம்ப், தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.மட்டுமின்றி, ரஷ்யாவுக்கு எதிராக போரை தொடங்கியதே உக்ரைன் தான் என குற்றஞ்சாட்டியிருந்தார்.
உக்ரைன் மீதான போருக்கு பின்னர் அமெரிக்கா உட்பட பல்வேறு உலக நாடுகள் ரஷ்யாவை தனிமைப்படுத்தியிருக்கும் நிலையில்,ஜனாதிபதியாக டொனால்டு ட்ரம்ப் பொறுப்புக்கு வந்த பின்னர், ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் கொள்கைகள் மாற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் உக்ரேனிய நாட்டினரை தவிர்த்து ஒட்டு மொத்த ஐரோப்பிய ஒன்றியம் முழுமையாக அதிர்ச்சியில் உறைந்த நிலை தான் தற்போது காண கூடியதாக இருக்கிறது .
ஏனெனில், இது தான் டொனால்ட் ட்ரம்ப். அவர் எந்த நேரத்தில் என்ன செய்வார் என்று யாரும் அறிந்து கொள்ள முடியாதா ஒரு விசேட தன்மைகள் கொண்ட மனிதர் தான் அவர்.
உக்ரைனுக்கு போரில் நிதி உதவி செய்த அமெரிக்கா, அதற்கு பதிலாக, உக்ரைனில் உள்ள அரிய வகை கனிமங்களை வெட்டி எடுக்கும் உரிமையை கேட்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவின் ஏதேச்சகார நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உக்ரைன் உட்படுத்தப்பட்டு இருப்பதே உண்மையாகும்..
நேட்டோ அமைப்புடன் உக்ரைன் இணையக் கூடாது என வலியுறுத்தி, கடந்த 2022 பிப்ரவரி முதல் ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்து வருகிறது. 3 ஆண்டுகளாக போரில் தாக்குப்பிடித்து வரும் உக்ரைனுக்கு, அமெரிக்கா பெரும் உதவிகளை செய்து வந்தது. ராணுவ ஆயுதங்கள், ஏவுகணைகள், ட்ரோன்கள் ஆகியவற்றை வழங்கிய அமெரிக்கா, உக்ரைனில் அரசு ஊழியர்கள், பள்ளி, சுகாதார நல ஊழியர்கள், போரில் பங்கேற்பவர்கள் என அனைவருக்கும் சம்பளம் வழங்குவதற்கான நிதி உதவியையும் அளித்தது. இதுவரை, உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியுள்ள மொத்த உதவித் தொகை சுமார் 350 பில்லியன் டாலர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.
இத்தகைய சூழலில், அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, காட்சிகள் மாறியுள்ளன. ஜோ பைடன் அரசு உக்ரைனுக்கு சாதகமாக செயல்பட்டுவந்த நிலையில், தற்போது மிகப் பெரிய அளவில் ஆன யூ டர்ன் போட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்ன் நடவடிக்கை ஒட்டு மொத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.
இதனிடையே உக்ரைனுக்கு உதவியதற்கு பதிலாக, அங்கு உள்ள அரிய வகை கனிமங்களை தோண்டி எடுக்கும் உரிமையை அமெரிக்காவிற்கு வழங்க வேண்டும் என கேட்டுள்ளார். உக்ரைனிலிருந்து சுமார் 500 பில்லியன் டாலர்கள் அளவிலான அரிய வகை கனிமங்களை தோண்டி எடுக்கும் உரிமையை அமெரிக்கா கோரிய நிலையில், உரிய பாதுகாப்பு உத்தரவாதங்களை அமெரிக்கா வழங்கவில்லை என கூறி, அந்த ஒப்பந்தத்தை உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி நிராகரித்தார்.
இதையடுத்து, ஒப்பந்தத்திற்கு உக்ரைன் ஒப்புக்கொள்ளாவிட்டால், உக்ரைன் போரில், தகவல் தொடர்பிற்கு முக்கிய அங்கமாக, இணைய சேவையை வழங்கிவரும் ஸ்டார்லிங்க செயற்கைக்கோள் உடனான உக்ரைன் போரில், தகவல் தொடர்பிற்கு முக்கிய அங்கமாக, இணைய சேவையை வழங்கிவரும் ஸ்டார்லிங்க செயற்கைக்கோள் உடனான தொடர்பு துண்டிக்கப் படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.
அப்படி ஒரு விஷயம் நடந்தால், அது உக்ரைனின் தகவல் தொடர்பில் ஒரு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். அதன் பாதிப்பு போரிலும் எதிரொலிக்கும். ஏனென்றால், போரை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளில் தகவல் தொடர்பிற்கு பெரிதும் உதவுவது இணைய சேவைதான். அதை அங்கு வழங்கி வருவது ஸ்டார்லிங்க் தான். இதனால், வேறு வழியில்லாமல் ஜெலன்ஸ்கி அமெரிக்காவின் ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.
அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எந்த நேரத்தில் எந்த வித நடவடிக்கைகளை எடுப்பார் என யாரும் அறிந்து கொள்ள முடியாது மட்டுமின்றி அவர் எடுக்கும் நடவடிக்கைகளை அவரே அறிந்து கொள்ள இயலாத ஒரு தலைவரை தான் அமெரிக்கா பெற்றுள்ளது என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்...

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட தயாராகியுள்ளது

(கே எ ஹமீட் )

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவது தொடர்பான கலந்துரையாடல் சனிக்கிழமை (11) மாலை அட்டாளைச்சேனையில் தனியார் விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில்....

இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக





எதிர்கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்து வருகின்றார்கள்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைவாக உள்ளது. இதனை அதிகரிக்குமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீல.மு.கா. கட்சி சில மாவட்டங்களில் மரச்சின்னத்திலும் சில மாவட்டங்களில் கூட்டுச் சேர்ந்தும் போட்டியிடவுள்ளது.

அனால் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிடவுள்ளது .

உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவதன் மூலம்தான் எமது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். இக் காலகட்டம் முஸ்லிம்களுக்கு முக்கியமானதாகும். பிரிந்து நிற்கின்ற முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

நாட்டில் முஸ்லிம்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் எமது கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

நாம் புதிய யுகத்துக்கான அரசியலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

முஸ்லிம்களின் அரசியல் உரிமைக்காக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி ஏனைய சமூகத்தினருக்காகவும் குரல் கொடுத்து வருகின்றது எனத் தெரிவித்தார்.

# சுஐப் எம். காசிம் எழுதிய "விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள்" நூல் வெளியீட்டு விழா

( ஐ. ஏ. காதிர் கான் )

மன்னார் மாவட்டத்தின் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட "விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயத்தின் வரலாறுகளைக் கொண்ட "விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள்" எனும் நூல் வெளியீட்டு விழா, தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலைய கணித பாட கருத்திட்ட உறுப்பினருமான எம்.ஏ. வாஹித் தலைமையில், புத்தளம் - தில்லையடி ஆர்.ஜே. மண்டபத்தில், (22) சனிக்கிழமை இடம்பெற்றது.

அலிகார் மகா வித்தியாலய பழைய மாணவிகளினால் பாடசாலை கீதம் இசைக்கப்பட்ட இச்சிறப்பு நிகழ்வின் வரவேற்புரையை, முன்னாள் நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமும் நூல் ஆக்கக் குழுவின் தலைவருமான ஏ.எம். அமீன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் அதிதியாக, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதுடன், நூலையும் வெளியீட்டு வைத்தார்.

நூலாய்வினை, ஐக்கிய நாடுகள் சபை முன்னாள் இலங்கைக்கான வதிவிட பிரதி நிதியும், சிறந்த




இலக்கியவாதியுமான ஏ.எல்.ஏ. அஸீஸ் நிகழ்த்தினார்.

நூலாசிரியர் பற்றிய விளக்கத்தை, வவுனியா பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத் தலைவரும் விரிவுரையாளருமான பேராசிரியர் ஞானசீலன் வழங்கினார். "தினகரன்" பத்திரிகையின் முன்னாள் இணை செய்தி ஆசிரியரும், சிரேஷ்ட எழுத்தாளருமான சுஐப் எம். காசிம், வடக்கில் பிரபலமான பாடசாலை யாகக் காணப்பட்ட அலிகார், பல்துறையாளர்களை உருவாக்கிய நிலையில் 90 களுக்கு முன்னரும், அதற்குப் பின்னரும் வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் பின்பும் விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயத்தின் பதிவுகளை மையமாகக் கொண்டு இந்த நூலை எழுதியுள்ளமை சிறப்பம்சமாகும்.

இச்சிறப்பு வெளியீட்டு விழா நிகழ்வில், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார், நூலாசிரியர் சுஐப் எம். காசிமுக்கு நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டி கௌரவித்த மையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி அமீர் பாயிஸ் உள்ளிட்ட மேலும் பலரும் உரையாற்றினர்.

# நீண்ட முயற்சியின் பின்னர் காங்கேயனோடை பிரதேசத்தில் மீண்டும் பஸ் சேவை ஆரம்பம்






(எம்.பஹத் ஜுனைட்)

மண்முனைப் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட காங்கேய னோடை பிரதேச மக்களின் நீண்ட கால கோரிக்கையாக காணப்பட்ட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கான பஸ் சேவை நீண்ட முயற்சியின் பின்னர் கடந்த சனிக்கிழமை (15) மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.பீ.எம்.ரஸீம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு பஸ் போக்குவரத்து நிலைய முகாமையாளர் ஸ்ரீதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பஸ் சேவையை ஆரம்பித்து வைத்ததுடன் பிரதேச பள்ளிவாயல் நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இவ் பஸ் சேவையானது தினமும் அம்பலாந்துறையில் இருந்து காங்கேயனோடை, காத்தான்குடி ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வரை சென்றடையும்.

இப்பிரதேச மக்கள் பல ஆயிரம் ஷரூபாக்கள் மற்றும் நேர விரயம் போன்றவற்றை தவிர்க்கும் வகையில் பலரது முயற்சியில் இவ் பஸ் சேவை ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நீர்கொழும்பு – "ஹிமா" பெண்கள் நலன்புரிச் சங்கத்தினால் "மகுடம் சூட்டும் விழா"

( ஐ. ஏ. காதிர் கான் )

நீர்கொழும்பு - போருத்தோட்ட, "ஹிமா" பெண்கள் நலன்புரிச் சங்கம், தேசிய ரீதியாக சாதித்து வரும் திறமையானவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு "மகுடம் சூட்டும் விழா" ஒன்றினை, இவ்வருடமும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தவுள்ளது.

இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், அழகுக்கலை கலைஞர்கள், கேக் டிசைனர்கள், தொழில் முயற்சியாளர்கள், சமூக சேவையாளர் கள், அறிவிப்பாளர்கள் என பல்துறைச் சார்ந்தவர்களும் இதற்கு உள்வாங்கப்பட்டு, அவர்களுக்கே இக்கௌரவிப்பை இச்சங்கம் வழங்கவுள்ளது.

அந்த வகையில், "திறமைக்கான தேடல் விருது விழா - 2025" ன் அடுத்த கட்ட நிகழ்வு, கொழும்பு மற்றும் நீர்கொழும்பு நகரங்களில் மிக விமர்சையாக நடத்தப்படவுள்ளது.

திறமையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தங்களது அறிமுக விபரங்களை, 077 570 9313 எனும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

# மர்ஹூம் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் நினைவு தினம்





(எம்.எச்.எம்.சியாஜ்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புத்தளம் மாவட்ட கிளையின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் நினைவு தினம் ஞாயிற்றுக்கிழமை (23) மாலை புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் மஹ்மூத் ஹஸரத் மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட ஜம்இயத்-துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் தமீம் (ரஹ்மானீ) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் கலந்து கொண்டு விஷேட உரையினை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், மத்ரஸா பரிபாலன சபையினர், உலமாக்கள், புத்தி ஜீவிகள் மற்றும் அப்துல்லாஹ் ஹஸரத்தின் குடும்ப உறுப்பினர்க ளும், காஸிமிய்யா மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் அவர்களுக்கு மத்ரஸா பரிபாலன சபை சார்பாக அப்துல்லாஹ் ஹஸரத்தின் குடும்ப உறுப்பினர்களால் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## சவுதி மன்னரின் அழைப்பில்

# இலங்கை பிரதிநிதிகள் உம்ரா பயணம்

சவூதி அரேபிய மன்னரும் இரு புனித பள்ளிவாயல்களின் சேவகருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சுஊதின் இரு புனித பள்ளிவாயல்களின் சேவகரின் விருந்தாளிகள் திட்டத்தினூடாக உம்ராக்கடமையை நிறைவேற்றுவதற்கான 4ஆவது குழுவினர் தற்போது புனித மதீனாவை வந்தடைந்துள்ளனர்.

இக்குழுவில் இந்தியா பாகிஸ்தான் பங்களாதேஷ் துருக்கி இலங்கை நேபாளம் மாலைதீவு தாஜிகிஸ்தான் ஆஸ்திரேலியா நியூசிலாந்து ரஷ்யா போன்ற நாடுகளைச் சேர்ந்த 250 விருந்தாளிகள் உள்ளடங்கியுள்ளனர்



சஊதி அரேபிய மன்னரும் இரு புனித பள்ளிவாயல்களின் சேவகருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சுஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சுஊத் ஆகியோரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் பேரில் இத்திட்டத்தை சஊதி அரேபிய வழிகாட்டல் அழைப்பு மற்றும் இஸ்லாமிய விவகார அலுவல்கள் அமைச்சு அமைச்சர் கலாநிதி அஷ்ஷேய்க் அப்துல் லதீப் பின் அப்துல்லாஹ் ஆல சேய்க் தலைமையில் அமுல்படுத்தி வருகின்றது.இத்திட்டத்துனூடாக உலகலாவிய ரீதியில் 70க்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள பல்துறைசார்ந்தவர்களுக்கு வருடா வருடம் புனித ஹஜ் மற்றும் உம்ராக்கடமைகளை நிறைவேற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. 4 ஆவது குழுவில்

இலங்கை இந்தியா பாகிஸ்தான் பங்களாதேஷ் துருக்கி நேபாளம் மாலைதீவு தஜிகிஸ்தான் அவுதிரேலியா நியூசிலாந்து ரஷ்யா போன்ற நாடுகளைச் சேர்ந்த 250 விருந்தாளிகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர்.

சஊதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி அவர்களின் முயற்சியின் பயனாகவும் சிபாரிசுக்கமையவும் இம்முறை புனித உம்ராக்கடமையை நிறைவேற்ற இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் 16 பேர் அடங்கிய ...ழு நேற்று வியாழக்கிழமை ...ிரவு புனித மதீனா நகர் ...ந்தடைந்துள்ளது.இக்குழுவினர் ...ின்று புனித மஸ்ஜிதுந்நபவியில் ஜும் ஆத்தொழுகையில் ஈடுபட்டதுடன் இன்றிரவு புனித மஸ்ஜிதுந்நபவியின் மதிப்புக்குரிய இமாம்களினுடனான சந்திப்பில் ஈடுபடவுள்ளனர்.அதனைத்தொடர்ந்து குபா பள்ளி வாயலுக்கு அழைத்துச்செல்லப்படவுள்ளதுடன் புனித அல்குர் ஆன் அச்சிட்டப்படும் இடங்களுக்கும் சென்று பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.அதனைத்தொடர்ந்து உஹதுப்போர் இடம் பெற்ற இடத்தையும் இன்று பார்வையிடவுள்ளனர்

**அஸ்ஹர் ஆதம்**







# வாசிப்பும் ரமழானும்

எமது இலங்கைச் சூழலில் ரமழான் காலத்தில் முஸ்லிம் பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களை பொறுத்த அளவில் கற்றல் செயல்பாடுகளை விட்டும் அவர்கள் தொடராக ஒரு மாத காலம் தம்மைத் தாமே துண்டித்துக் கொள்கின்றார்கள்

முன்னைய மூத்த முற்போக்கான இமாம் களது காலத்தில் பிக்ஹ் மற்றும் ஹதீஸ் துறை மஜ்லிஸ்கள் இழுத்து மூடப்பட்டு ரமலான் காலம் முழுவதையும் அமல்கள் செய்வதற்கு பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுக் கொண்டார்கள். முழு நன்மைகளையும் கொள்ளையடித்துக் கொள்வதற்காக அவர்கள் திட்டமிட்டு செயல்பட்டனர். தூர நோக்கு மிக்க அவர்களது செயற்பாடுகள் போன்றதல்ல இது.

இந்த வகையில் ரமலான் கால விடுமுறையில் முறைப்படுத்தப்பட்ட கல்வி செயற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளும் மூடப்படுகின்றன அதேபோல பள்ளிகளை மையப்படுத்திய ஆன்மீக செயலமர்வுகள் தர்பியா பயிற்றுவிப்புக்கள் போன்றவற்றுக்கான சந்தர்ப்பங்களும் மிகவும் குறைவு.

முழுமையாகவே பாடசாலைகள் மூடப்பட்டு பாடப் புத்தகங்கள் கிடப்பில் போடப்படுகின்றன மாணவர்களுக்கும் கற்றலுக்கும் இடையில் எந்த விதமான தொடர்பும் இல்லாமல் அறுபட்டு போவதனை காணலாம்

ஆனால், இதற்கு முற்றிலும் மாற்றமாக அல்குர்ஆன் இறக்கப்பட்ட ரமழான் மாதம் நோன்பு கடமையாக்கப்பட்ட மாதத்திலேயே இறைவன் தன்னுடைய இறை போதனையின் முதல் வசனத்தை வாசிப்பீராக என்று தான் அமைத்து வைத்திருக்கின்றான். அப்படி என்றால் வாசிப்பதை கொண்டாட வேண்டிய மாதமாக இதனை கருத வேண்டும்.

எப்படி ரமழான் மாதத்தில் நோன்பு நினைவூட்டப்படுகிறதோ அதுபோல வாசிப்பும் நினைவூட்டப்பட வேண்டும். அதுவும் ஒரு வணக்கம், வழிபாடு. ரமழான் காலத்தில் இறைவன் சொன்ன முதல் கட்டளை அது. எனவே அதனை மிகச் சிறப்பாக நிறைவேற்றக் கடமை பட்டிருக்கின்றோம்.

இந்த ரமழானிலே நாம் மிக அதிகமாக வாசிக்க வேண்டிய, சிந்திக்க வேண்டிய கருத்தூன்றிக் கவனிக்க வேண்டிய நூலாக புனித அல்குர்ஆன் காணப்படுகின்றது.

அல்குர்ஆன் மிகப் பெரும் சிந்தனை. அருள் நிறைந்த பொக்கிஷம் அதனை கற்பதற்கான நாட்டத்தை ஆர்வத்தை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அரபு மொழியை அதற்காக கற்றுக்கொள்ள நாம் உரிய ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். அரபு மொழியை புறக்கணித்துவிட்டு அல்குர்ஆனை புரிந்து கொள்ள கற்பனை செய்து விட முடியாது.

இறைவனின் அல்குர்ஆன் என்பது சக்ஷரீஆ துறை மாணவர்களுக்கு மாத்திரம் வாசிப்பதற்கும் ஆய்வு செய்வதற்குமான நூல் அல்ல. அது சகலரும் கற்றறிந்து பாடம் படிப்பினைகள் பெற்று வாழ்வை ஒழுங்குப்படுத்திக் கொள்வதற்கான நூல் அல்குர்ஆனை வயது வேறுபாடின்றி சகலரும் கற்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக எமது சமூகத்தில் சிறு குழந்தைகளோடு அல்குர்ஆனை ஓதுவது வாசிப்பதற்கு கற்பது நின்று விடுகின்றது. அதேபோல பிற்பட்ட காலத்தில் வயது முதிர்ந்த நிலையை அடைந்ததும் அவர்கள் தங்களுடைய நேரத்தை போக்கிக் கொள்வதற்காக அல்குர்ஆனை வெறுமனே ஓதுகின்ற ஒரு நிலை காணப்படுகிறது

நபிகளாருக்கு புனித அல்குர்ஆன் அருளப்படுகின்ற பொழுது அவருடைய வயது 40.

அந்த 40 வயதிலிருந்து அறுபத்து மூன்று வருடங்கள் வரை சுமாராக 23 வருட காலங்கள் அவர் அல்குர்ஆனோடு நெருக்கமாக நேரடியாக தொடர்பு கொண்டு அதனை கற்க கற்பிக்க போதனை செய்ய கவனம் செலுத்தினார்.

இந்தப் பின்புலத்தில் அல்குர்ஆன் வாசிப்புக்கான மாதம் வாசிப்பை தூண்டிய மாதம் வாசிப்புக்கு வழிகாட்டல் வழங்கிய மாதம் நாங்கள் இந்த ரமதானில் அதிகம் வாசிக்க வேண்டிய இறை நூலாக மறை நூலாக புனித அல்குர்ஆன் காணப்படுகிறது.


ரமழான் மாற்றத்துக்கான மாதம். வாசிப்புக்கான மாதம். வாசிப்பு முதல் வணக்கம் இறை கட்டளை. ரமழானை வாசிப்பதற்காக எமது அறிவை திறனை சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்காக ஆன்மீக மேம்பாடை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்வோம்






நாச்சியாதீவு பர்வீன்

# “நட்டுமை” மீதான வாசிப்பு அனுபவம்




**வி.எம்.ரமேஸ்**

ஈழத்தில் வெளிவந்த அவதானத்துக்குரிய குறுநாவல்களின் வரிசையில் நட்டுமை தனித்துவமானதாக நிச்சயம் இருக்க வேண்டும். 1930 காலங்களில் ஈழத்து கிழக்கிலங்கையில் இஸ்லாமிய பாரம்பரிய கிராமமொன்றில் நிகழும் நம்பிக்கைகள், கலை,கலாச்சார பண்பாட்டு வெளிகளை பசுமையோடு காட்டும் சுமார் 150 பக்கங்களை கொண்ட அற்புதமான குறுநாவல் நட்டுமை.

இந்நாவல் வாசிப்பின் கிராமிய பாரம்பரிய மொழி, பாத்திர வார்ப்பு, கதைக்கருவென மும்முனையில் அதன் அகத்தை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும் ஒரு வாசகனுக்கு. பிரதேச அல்லது கிராமிய மொழிகளின் கலை என்பது பிசகில்லாமல் அச்சொட்டாக அதன் அமைப்பின் அழகியல் குன்றாமல் பயன்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது. இந்த புனைவின் முழுதும் மீரான் வந்து போய்கொண்டே இருந்தார் மனதில். இஸ்லாமிய கிராமிய பாரம்பரிய மொழி மட்டும் பண்பாடுகளை புனைவில் மீரானிடமே கண்டடைந்தேன். அவ்வளவு அன்பும் ஈடுபாடும் அந்த மொழியின் மீரானுடாகவே ஏற்பட்டது. தீரன் நௌஸாத்தின் இந்த படைப்பில் இன்னும் இன்னும் அதன் ஈரமும் ஈர்ப்பும் உணர்ந்தேன். மக்களின் பண்பாட்டு பாரம்பரிய மொழியை கையாண்டிருப்பார். அந்த மொழிக்காகவே அதன் சாத்தியப்பாடிற்காகவே இந்த நாவலை வாசித்தேன். கிழக்கிழக்கை கிராமிய புனைவு மொழியில் நட்டுமை அகராதியாக இருக்க வேண்டும்.

மற்றையது பார்த்திர வார்ப்பு ஒரு புனைவிற்கு இவ்வளவு கச்சிதமாக பாத்திரங்கள் ஒத்துபோவதை இந்த நாவலில் தான் உச்சகட்டமாக அண்மையில் வாசித்தவற்றில் கண்டேன்.

ஆர்.எம் நௌஸாத் ஒரு லெஜண்டாக அந்த இடத்திலேயே மின்னுகிறார். அனாவசியமான எந்த உரையாடல்களையோ பாத்திரங்களோ அதன் அகப்புற சூழலோ தீரன் காட்டவும் இல்லை கையாளவும் இல்லை. முக்குலத்து கிழவி வரும் இடங்களெல்லாம் அட்டகாசம் அசகாய ஈரோயினி அவள்தான் கிராமத்தின் ஈரத்தை அவள்தான் உச்சத்தில் பொழிய செய்கிறாள். அதிலும் அவள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றால் போல பாடும் பாடலும் ஒங்கி அழும் ஒப்பாரியும் அது இடம்பெறும் இடமும் டைமிங் அதி அற்புதம். நௌஸாத்தை மிக உயரத்தில் கொண்டு நிறுத்தும் இடங்கள் அவை. அதற்காகவே தாராளமாக ஜே ஜே போடலாம் தீரனுக்கு.

மேலும் நாவலின் கதை கரு பாரம்பரியமான பண்ணை முறையாக இருக்க வேண்டும். இந்த போடியார் வம்சக் கதை ஆங்கிலேயரின் காலம் நிகழ்வதால் அங்கேயே எம்மை அழைத்து செல்கிறார். கதை முன்கூட்டிய தீர்மானத்தை கொடுத்தாலும் புனைவு திரும்பும் இடங்களில் எல்லாம் சின்னதாய் வாசகனுக்கு அனுமானத்தையும் தாண்டிய திருப்பத்தை வைத்திருப்பது நாவலை ஒரே மூச்சில் வாசிக்க ஆர்வத்தை தூண்டுகிறது. கட்டாயம் வாசிக்க வேண்டிய. நாவல்.

# பள்ளிவாசல்களை அரசியல்வாதிகள் கையகப்படுத்துவது மிகவும் ஆபத்தானது

**அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் வலியுறுத்து**



பள்ளிவாசல்களை அரசியல்வாதிகள் கையகப்படுத்துவது மிகவும் ஆபத்தானது என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இறை இல்லங்கள் என்பது அல்லாஹ்வை வழிபடுவதற்காக அல்லாஹ்வும் ரஸூலும் காட்டிய வழிமுறையை முஸ்லிம் சமூகத்தை வழிநடாத்து வதற்கான உருவாக்கப் பட்டிருக்கின்ற இறை இல்லங்களாகும். இந்த இறை இல்லங்கள் ஆன்மீக ரீதியான, சமூக ரீதியான மற்றும் சமூகத்தோடு சம்பந்தப்பட்ட பல்வேறு விவகாரங்களில் அவ்வப்போது சமூகத்துக்கு தேவைப்படுகின்ற ஒத்துழைப்பை, வழிகாட்டலை, பங்களிப்பைச் செய்வதுதான் பள்ளிவாசலுடைய பிரதான பணியாக இருக்கின்றது.

அண்மைக் காலமாக பள்ளிவாசல்கள் என்பது வெறுமனே தொழுகைக்காக மட்டும் என்றிருந்த நிலை மாறி, பள்ளிவாசல்கள் சமூக மத்திய நிலையங்களாக மாறி வருகின்ற இக்காலப் பகுதியில் அதனுடைய உண்மையான அந்தப் பணியை சமூகம் எடுத்துக்கொள்ளும் வகையில் அதற்குப் பொருத்தமான புத்திஜீவிகளையும் உலமாக்களையும் தகுதியானவர்களையும் அடையாளம் கண்டு நிர்வாக சபைக்குத் தெரிவு செய்வது மக்களுடைய கடமையும் பொறுப்புமாகும்.

இந்த நோக்கத்தைப் புறக்கணிக்கும் வகையில் அரசியல்வாதிகளுடைய அல்லது கட்சி சார்ந்தவர்களுடைய திட்டங்களை நிறைவேற்றும் வகையில் பள்ளிவாசல் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதும் அமைப்பதும் என்பது உண்மையிலேயே கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

# ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் குறித்து கார்டினல் கவனம் செலுத்தவில்லை

**குற்றஞ்சாட்டும் ஞானசார தேரர்!**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து கார்டினல் மால்கம் ரஞ்சித்துக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்ததாகவும், ஆனால் அது காதில் விழவில்லை என்றும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து கார்டினல் மால்கம் ரஞ்சித்துக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்ததாகவும், ஆனால் அது காதில் விழவில்லை என்றும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு கூறியுள்ளார்,

அரசாங்க புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தனர் என்று கூறினார்.

“தாக்குதலுக்கு முன்பே நாங்கள் கார்டினலை அணுகி அவருடன் நீண்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி, சாத்தியமான அச்சுறுத்தல் குறித்து எச்சரித்தோம். இருப்பினும், அவர் எங்கள் எச்சரிக்கைகளை புறக்கணித்தார்,” என்று அவர் குற்றம் சாட்டினார்.

“பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் என்ற முறையில், தாக்குதல் குறித்து தொடர்புடைய பணியாளர்களுக்குத் தெரிவிக்க எங்களுக்கு அதிகாரம் இருந்தது.

ஆனால் நாட்டின் பாதுகாப்புப் படைகளைக் கட்டுப்படுத்த எங்களுக்கு அதிகாரம் இல்லை. புலனாய்வுப் பிரிவுகளால் கூட அணுக முடியாத பல ரகசியத் தகவல்கள் எங்களுக்குக் கிடைத்தன,” என்று ஞானசார தேரர் கூறினார்.

“2014 முதல் தாக்குதல் குறித்து நான் எச்சரித்து வந்தேன். அந்த நேரத்தில் அந்தந்த அரசாங்கத் தலைவர்களுக்கு 17 கடிதங்களை அனுப்பினேன். நாட்டில் வேறு பல தீவிரவாதக் குழுக்கள் தோன்றுவது குறித்தும் நான் கவலை தெரிவித்தேன்,” என்று அவர் கூறினார்.

அரசாங்கத்தின் எந்த உதவியும் இல்லாமல், இந்தத் தகவல்கள் அனைத்தையும் நாங்கள் சுயாதீனமாகச் சேகரித்தோம். நாட்டின் இன ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் நலன்களுக்காக நாங்கள் இதைச் செய்தோம்,” என்று அவர் கூறினார்.

“இறுதியாக, நாங்கள் அறிக்கையை ஒப்படைத்தோம், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை,” என்று ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தன்னிடம் இருக்கும் தகவல்களைப் பகிர்ந்து கொண்டு தற்போதைய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட விசாரணைக்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரமழான் மாதம்

பிறை நிலாவின். ..
ஆரம்பம் கண்டு
உதித்தெழுந்த...
உன்னதமான மாதம்!

நோன்புகளை
நோற்று தேகம்
நோய்களின்றி. ..
ஆரோக்கியம் தரும்
அற்புதமான மாதம்!

ஆன்மீகத்தில். ..
ஆழமாய் ஈடுபாடு
காட்டச் செய்யும். ..
ஆயிரம் மாதங்களை விட
சிறந்த மாதம்!
பள்ளிவாசல்களில். ..
படியேறச் செய்து
பாவச் சுமைகளிலிருந்து
விடுதலை அடைந்து
கொள்ள பச்சாதாபம்
தேடும் மாதம்!

தானதர்மங்களை
வகை வகையாக...
வாரி வழங்கி
வறுமை நீங்க...
வழி கொடுக்கும்
வல்லமை மிகு மாதம்!

ஏழ்மையின் பசியை. ..
ஏற்றுக் கொள்ளவும்
ஏங்கித் தவிக்கும்
ஏழைகளுக்கு. ..
ஈந்திடச் செய்யும்
பித்ராவின் மாதம்!
கட்டுக்கடங்கா...
இப்லீஸ்களை
கதறக் கதற...
கட்டிப்போடச் செய்யும்
கண்ணியமிக்க மாதம்!

அல்குர்ஆன்
அருளப்பெற்ற மாதமும்
அல்லாஹ்வின். ..
அன்பும், அருள் மழையும்
அதிகமதிகம் பொழியும்...
அழகிய மாதமாய்
” ரமழான் மாதம் ”

**– பயாஸா பர்வீன், பலகத்துறை.**

## மனநலமும் ஆலோசனையும் 72

# நோன்பாளியின் சந்தோஷம்

"சந்தோஷம்" என்பது இன்பம், மன ஆறுதல், தெளிவு, ஆச்சரியம் போன்ற உணர்ச்சிகளை கொண்ட கலவையால் வகைப்படுத்தப்படும் நேர்மறையான உணர்ச்சி நிலையைக் குறிக்கிறது. எமது எதிர்பார்ப்புகளை, ஆசைகளை அடையும் போது, ஒரு சுகமான உணர்வு எமக்கு கிடைக்கிறது. அந்த உணர்வு சந்தோஷத்தின் தருணத்தை உருவாக்குகிறது. பிறகு அதை அனுபவிக்க வைக்கிறது. இந்த செயல்முறை

அடிப்படை மனநிறைவை தாண்டிய ஒரு அழகான அனுபவத்தை சுவைக்கும் வாய்ப்பை எமக்குத் தருகிறது.

எமது மூளை "டோபமைன்", மற்றும் "செரடோனின்" போன்ற மகிழ்ச்சியான இரசாயனங்களை வெளிடுவதால் இந்த அழகான அனுபவங்கள் கிடைக்கின்றன.

இது சந்தோஷத்தை அனுபவிப்பதற்கான பொதுவான விதியாக இருந்தாலும்... எல்லோருக்கும் இந்த முறையில் தான் சந்தோஷம் கிடைக்கிறது என்றாலும்... நோன்பு நோற்கும் ஒருவருக்கு சந்தோசத்தை அனுபவிக்க அற்புதமான பிரத்தியேகமாக இரண்டு சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அது பற்றி இன்றைய கட்டுரை மேலோட்டமாக ஆராய்கிறது.

- நோன்பாளியின் சந்தோஷம் என்றால் என்ன?
- அதை எப்படி அடைவது?
- அதை எப்படி உணர்வது அல்லது அனுபவிப்பது போன்ற வினாக்கள் எம்மிடம் உருவாகலாம்.

ஆம்..! ஒரு நோன்பாளி இரண்டு சந்தோஷங்களை அனுபவிக்கும் அருளை பெற்றுக் கொள்கிறார்.

1. நோன்பு திறக்கும் போது கிடைக்கும் சந்தோஷம்.

2. படைப்பாளன் அருள் இறைவனை சந்திக்கும் போது கிடைக்கும் சந்தோஷம்.

இவை நபிகளார் நவின்ற வார்த்தைகள்.

ஒரு நோன்பாளி நாள் முழுவதும் சுயக்கட்டுப்பாடு பேணி, பொறுமை காத்து, இறைவனுக்கு கீழ்ப்படிந்து அவனது வெகுமதியை நாடி நோன்பிருந்து விட்டு அவர் நோன்பு திறக்கும் போது சந்தோஷத்தின் முதல் சந்தர்ப்பத்தை அனுபவிக்கிறார்.

ஒவ்வொரு வருடமும் வருகின்ற ரமழான் மாதம், அவரை கௌரவ விருந்தினராக அழைக்கும் போது அல்லாஹ்வின் கூலியை மட்டும் நாடி அந்த அழைப்பை முழுமையாக ஏற்று கௌரவித்தமைக்காக

அல்லாஹ்வை சந்திக்கும் பாக்கியத்தை அடைகிறார். அதன் போது இரண்டாவது சந்தோஷத்தை அனுபவிக்கிறார்.

இதில் நோன்பு திறக்கும் போது கிடைக்கும் சந்தோஷம் பற்றி இங்கு நோக்குவோம். சில வினாக்களை கேட்டுக் கொண்டே விடயத்தை தொடர்வோம்.

1. நோன்பு திறக்கும் போது கிடைக்கும் சந்தோஷத்தை எந்த நோன்பாளியால் உணரலாம்?

2. அதற்கு நான் தகுதியானவனா?

3. அந்த சந்தோஷத்தை நான் எப்போதாவது அனுபவத்திருக்கிறேனா?

இந்த வினாக்களுக்கு நாங்கள் விடை தேட வேண்டி இருக்கிறோம். விடை தேடாமல் நோன்பு நோற்றால் எமது நோன்பின் தரம் எப்படி இருக்கும் என்பதை இப்போதே தீர்மானிக்கலாம்.

1. எவர் தனது இறைவனின் திருப்திக்காக மட்டுமே நாள் முழுவதும் பசித்திருந்து, தாகித்திருந்து, அனைத்து செயல்களையும் அழகாக செய்து நோன்பிருக்கிறாரோ அவரால் இந்த சந்தோஷத்தை அனுபவிக்கலாம்.

2. எவர் பொருந்தாத எண்ணங்களை கட்டுப்படுத்தி, தேவையற்ற உணர்வுகளை புறந்தள்ளி, தன்னை பாதுகாத்துக் கொண்டு நோன்பிருக்கிறாரோ அவரால் இந்த சந்தோஷத்தை அனுபவிக்கலாம்.

3. எவர் சைத்தானின் வழியில் இருந்து விடுபட்டு, கீழ்த்தரமான ஆசைகளை முடக்கி, தன் உணர்ச்சிகளை பாதுகாத்து நோன்பிருக்கிறாரோ அவரால் இந்த சந்தோஷத்தை உணரலாம்.

4. எவர் இறைவனுக்கு முற்றிலும் அடிமையாக இருந்து அவன் சொன்னவற்றை சொன்ன விதத்தில் அப்படியே செய்து நோன்பிருக்கிறாரோ அவரால் இந்த சந்தோஷத்தை அனுபவிக்கலாம்.

5. எவர் இறைவனின் கட்டளையை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வுடன் அன்றைய பகல் நேரத்தை நோன்பிருந்து செலவிட்டாரோ அவரால் இந்த சந்தோஷத்தை இலகுவாக அனுபவிக்கலாம்.

இந்த சந்தோஷத்தை உணரும் போதும் உணர்ந்த பிறகும்

- எம் மனம் இலகுவான, இலேசான, மென்மையான நிலையில் இருக்கும்.
- மனம் திருப்தி நிலையை அடையும்.
- மனதில் கவனம், அவதானம் நிலைபெறும்.
- நல்வாழ்வின் சுவையை உணரும் வாய்ப்பு கிடைக்கும்.
- மன அழுத்தம் குறையும்.
- நம்பிக்கை உறுதியாகும்.

இறைவனை திருப்தி அடையச் செய்வதற்காக மட்டுமே இந்த சந்தோஷம் கிடைக்கிறது. இது பசியுடன் இருந்து விட்டு சாப்பிடக் கிடைத்ததே என்பதால் கிடைக்கும் சந்தோஷம் அல்ல. அந்த சந்தோஷத்தை உலகில் எவருக்கும் அனுபவிக்கலாம். அதற்கு மதமும் தேவையில்லை. வழிகாட்டலும் அவசியமில்லை.

நோன்பு திறக்கும் போது நோன்பாளிக்கு கிடைக்கும் சந்தோஷம் விசித்திரமானது. இறைவனுக்காக நோன்பிருந்தமைக்காக இறைவனால் வழங்கப்படுகின்ற தூய சந்தோஷத்தை உண்மையான நோன்பாளியால் மட்டுமே அனுபவிக்க முடியும். இதற்கான தகைமை

- நோன்பை நோன்பாக நோற்பது.
- இறைவனுக்காக மட்டும் நோற்பது.

நோன்பாளிக்கு கிடைக்கும் இரண்டு பாக்கியங்களையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய வாய்ப்பை அல்லாஹ் எங்கள் அனைவருக்கும் தரவேண்டும். அதற்காக ஆசை ஆர்வத்துடன் செயல்படக்கூடிய உள உடல் ஆரோக்கியமும் எமக்கு கிடைக்க வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




**பயாஸா பாஸில்**

# ரமழானுக்கு தயாராவோம்!

ரமழான் மாதம் முஸ்லிம்களுக்கு மிக முக்கியமான மற்றும் புனிதமான மாதமாகும். இந்த மாதம் நோன்பு நோற்பது மட்டுமல்லாமல், இறைநேசத்தை அதிகரிக்கவும், அறங்களுக்காக வாழவும், சகோதரத்துவத்தை வளர்த்துக்கொள்ளவும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது. எனவே, ரமழானை பயனுள்ளதாகக் கழிக்க நாம் முன்கூட்டியே தயாராக வேண்டும்.

**1. மனதளவில் தயாராகுதல்**

ரமழான் ஒரு ஆன்மீக பயணம் என்பதால், இதற்கான மனநிலையை உருவாக்குவது முக்கியம். இறைநேசத்துடன் நோன்பு நோற்றல், அதிகமாக துஆ செய்வது, தன்னிலைப் பரிசோதனை செய்து வாழ்க்கையில் தேவையான மாற்றங்களை கொண்டு வருவது ஆகியவை முக்கியமானவை.

**2. உடல் ரீதியாக தயாராகுதல்**

நோன்பு நோற்பதற்கு உடல் ரீதியாகவும் தயாராக வேண்டும். ரமழானுக்கு முன்பு உணவுப் பழக்கங்களை மெதுவாக மாற்றி, அதிக நீர் அருந்தி, ஆரோக்கியமான உணவுகளை எடுத்துக்கொள்வது நல்லது.

**3. இருதயத்துடன் தர்ம செயல்**

ரமழான் மாதம் தர்மத்தின் முக்கியத்துவம் மிகுந்த மாதமாகும். ஏழைகள், தேவையுள்ளவர்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு உதவுவதை பழக்கமாக கொண்டால், இது இறைநேசத்தை அதிகரிக்க உதவும்.

**4. குர்ஆன் மற்றும் தொழுகையில் சிறப்பு**

ரமழான் மாதத்தில் அதிகமாக குர்ஆன் வாசிப்பதும், தொழுகை செய்வதும் நல்லவை. குறிப்பாக, தராவீஹ் தொழுகையில் ஈடுபடுவது மிகுந்த அருள் பெற உதவும்.

**5. தவறுகளை திருத்திக் கொள்ளுதல்**

பொது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை திருத்திக்கொள்வதும், மனப்புரிதலுடன் வாழ முயற்சிப்பதும் ரமழானுக்கான சிறந்த தயாரிப்பாகும்.

ரமழான் மாதம் ஒரு சிறப்பான காலக்கட்டம். இதனை பயனுள்ளதாகக் கழிக்க மனதாலும், உடலாலும், ஆன்மீகத்திலும் முழுமையாக தயாராகிக் கொள்ள வேண்டும். இம்மாதம் நாம் செய்த நல்ல செயல்கள், கடவுள் அருளைப் பெறுவதற்கான வழியாக அமையட்டும்!

# ரமழானும் பொறுமையும்

ரமழான் மாதத்தில் பொறுமை மிகவும் முக்கியமான ஒரு பண்பு ஆகும். இந்த மாதம் உடல் மற்றும் மனதிற்கு கட்டுப்பாடுகளை விதித்து, சகிப்புத்தன்மையை வளர்க்கும் ஒரு காலமாகும்.

ரமழான் கால பொறுமையின் முக்கியத்துவம்:

1. உணவும் நீரும் இல்லாமல் நீண்ட நேரம் நோன்பு இருப்பது: இது உடல் மற்றும் மன உறுதியை வளர்க்கும். தாகம், பசியை பொறுமையுடன் சமாளிப்பது முக்கியம்.

2. தீய வார்த்தைகள், கோபம், சண்டை தவிர்த்தல்: மனதை அமைதியாக வைத்து பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

3. மனதிற்கும் உடலுக்கும் கட்டுப்பாடு: கவனச்சிதறல்களுக்கு இடமளிக்காமல், மனதை கடவுளின் நினைவில் நிலைநிறுத்த வேண்டும்.

4. தவ்ஃபீக் (நம்பிக்கை) மற்றும் தக்வா (ஆழ்ந்த பக்தி) வளர்ப்பு: சோதனைகளை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு கடவுளின் நம்பிக்கையில் இருக்க வேண்டும்.

5. அறநெறிகளை கடைப்பிடித்து, பொறுமையுடன் பிறருக்கு உதவுதல்: ரமழான் மாதம் கருணை மற்றும் பொறுமையை அதிகம் பயிற்சி செய்யும் காலமாகும்.

"நோன்பு என்பது பொறுமையின் அரைபங்கு" என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருப்பது, இந்த மாதத்தில் பொறுமையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.



# 8 கிராமங்களை ஒன்றிணைத்து "அழகிய கிராமம்" என்ற தொனியில் வேலைத் திட்டங்கள்

(ஆரிப்)

அனுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதியில் எட்டூர் கிராமங்களை ஒன்றிணைத்து அழகிய கிராமம் என்ற தொனிப்பொருளில் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு k Muslim Aid நிறுவனத்தின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் கல்வித்திறன் மற்றும் விளையாட்டு, தொழில் முனைவு, ஆரோக்கியமும் சிறந்த சுகாதாரம் மற்றும் சக்காத் சதகா மற்றும் நிதி முகாமைத்துவம் என்ற அடிப்படையில் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஆலோசனை அங்குரார்ப்பன கூட்டம் கோவில்பந்தாவ சமுர்த்தி அபிவிருத்தி அலுவலக மண்டபத்தில் (28) நடைபெற்றது.

இதன்போது Muslim Aid நிறுவனத்தின் பிரதிநிதி எம்.ரீ.எம்.பஸ்லான் (HOP) நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

குறித்த செயற்திட்டத்தின் ஊடாக வாழ்வாதார சுயதொழில் ஊக்குவிப்பு, கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் , விளையாட்டு துறையை விருத்தி செய்தல் , சுகாதார துறை சார்ந்த விழுமியங்களை முன்னெடுத்துச் செல்லல் , சக்காத் சதகா மற்றும் நிதி முகாமைத்துவம் போன்றவைகளை திட்டமிட்டு செயல்படுத்துதல் போன்ற செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.





குறித்த செயற்திட்டம் முதற் கட்டமாக கோவில்பந்தாவ மற்றும் இஹலகொட்டியாவ ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கு வாழும் மக்களின் சுய தரவுகள் சேகரிக்கப்பட்டு செயற்திட்டத்தினை மேற்கொள்ள கலந்தாலொசிக்கப்பட்டுள்ளது. இதற்காக கிராம மட்டத்தில் குழுவினை நியமித்து வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழங்கட்டுள்ளது.

இதன் போது அப்துல் ஜப்பார் பைஷல் (காஷிமி ) Muslim Aid நிறுவனத்தின் அங்கத்தவர்களான எம்.ஏ.ஹக்கீம் எம்.ஐ.எம்.இக்ராம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சமூக நீதிக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் போட்டி!

சமூக நீதிக் கட்சியின் மூன்றாவது ஆண்டு பூர்த்தி மாநாடு, 04.02.2025 அன்று கொழும்பு, கலாநிதி என். எம். பேரேரா நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.
இந் நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள், அதிதிகள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
கட்சியின் பொருளாளர் ஹுஸ்னி ஜாபிரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷாத் அஹ்மத் நிகழ்த்தினார். இவ்வுரையின் போது சமூக நீதிக் கட்சி, கடந்த மூன்று வருடங்களாக மக்களை அரசியல் மயப்படுத்த ஒழுங்கு செய்த மலையகம் 200 கருத்தரங்கு, 13 ஆம் திருத்தச் சட்டம் கருத்தரங்கு, பலஸ்தீன ஒருமைப்பாட்டு கண்காட்சி, நிகழ்நிலைக் காப்புச் சட்டம் கருத்தரங்கு போன்ற நிகழ்வுகளையும், பங்குபற்றிய மக்கள் போராட்டங்களையும் நினைவூட்டினார்.
அடுத்தாக கட்சியின் ஸ்தாபகத் தலைவர் நஜா முஹம்மத், சமூக நீதிக் கட்சி இலங்கையில் ஏன் அவசியம் என்பது குறித்தும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தோடு ஒரு ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலினூடாக அரசியலில் ஈடுபடுவது குறித்தும் உரையாற்றினார்.
மேலும் உரையாற்றிய கட்சியின் ஸ்தாபக தலைவர் நஜா முஹம்மத்,
"தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஒரு ஐந்து வருட ஆணையை வழங்கியிருக்கின்றார்கள்.
இல ங்கை அரசியல் வரலாற்றில் ஒரு தனிக் கட்சியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும், மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பெற்ற ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி திகழ்கின்றது. எனவே இந்த மக்களாணையை நாங்கள் மதித்து ஐந்து வருடங்களுக்கு அவர்கள் தொடர்ந்து இந்த ஆட்சியைக் கொண்டு செல்வதற்கு நாங்கள் அனுமதிக்க வேண்டும்.
எதிர்க்கட்சிகளின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இந்த மக்களாணையைத் தட்டிப்பறிக்கின்ற முயற்சிகளுக்கு மக்கள் பலியாகிவிடக்கூடாது அவ்வாறு செயற்படுகின்ற போது அது நாட்டிலே இன்னும் பல பிரச்சினைகளையும் சிவில் யுத்தத்துக்கும் அல்லது வன்முறைக்கும் ஜனநாயக விரோத சூழ்நிலைக்கும் அது இட்டுச் செல்லும் என்பதோடு அது நாட்டை இன்னும் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கும் இட்டுச்செல்லும். ஆகவே அத்தகைய முயற்சிக்கு மக்கள் துணை போகக்கூடாது.
அதே நேரத்தில் 76 வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்த இந்த கட்சிகளுக்கு இடையிலேயே பாரிய வேறுபாடுகள் இல்லை. ஒரேவகையான அரசியலைத் தான் முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். இலங்கையில் முதன்முறையாக ஒரு இடதுசாரி சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி ஆட்சியை முழுமையாக கைப்பற்றி இருக்கிறது. இது எமது அனுபவத்தில் முற்றிலும் வித்தியாசமானஒரு சூழ்நிலை. இந்த சூழ்நிலையை மிக ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும்.
அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்தல், மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வூட்டல், மக்களை வழிகாட்டும் அரசியல் என்பது இந்த புதிய சூழ்நிலையில் மிகவும் முக்கியமானது. அந்தப்பணியை சமூக நீதிக் கட்சி மேற்கொள்ளும்" என்று தெரிவித்தார்.
இந்நிகழ்வில் நோக்கவுரையாற்றிய கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்று கற்கைப் பிரிவு பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி அவர்கள்,




இலங்கையின் வரலாறு நெடுகிலும் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் இருந்த தொடர்பு எவ்வாறு குறைந்து வந்துள்ளது என்பது குறித்தும், தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும், சமூக நீதிக் கட்சியின் அரசியல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும் இங்கு உரையாற்றினார்.
இறுதியாக சமூக நீதிக் கட்சியின் தலைவர் அர்க்கம் முனீரின் 'கட்சியின் மூன்று வருடப் பூர்த்தி மாநாட்டுரை' இடம்பெற்றது. அவ்வுரையில் அர்க்கம் முனீர், "இன்று அரசியல் முறைமை மாற்றத்தைக் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியோடு ஆட்சியமைத்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி. 2015 இல் வந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் அவ்ஆட்சி மாற்றத்தின் போது தகவலறியும் உரிமைச் சட்டம், 19 ஆம் திருத்தச் சட்டம் போன்ற பல மக்கள் நலன் வேலைத் திட்டங்களை கொண்டுவர நாம் பல்வேறு வழிகளில் போராடி வெற்றி பெற்றோம்.
2024 இல் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தில் அவர்கள் இந்த அரசியல் முறைமை மாற்றத்தினைக் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்றனர்.
மறுபுறத்தில் கடைந்தெடுத்த இனவாதிகள் மற்றும் ஊழல் வாதிகள் எல்லாம் அவசர அவசரமாக ஒன்று சேரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு "எதிர்க்கட்சிகள் செய்யும் சதிகளில்" ஒருபோதும் சமூக நீதிக் கட்சி பங்கேற்காது. அவ்வாறு சதிகளை முறியடிக்க சமூக நீதிக் கட்சி தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.
இதன் அர்த்தம் அரசாங்கத்தின் மீது எமக்கு விமர்சனங்கள் இல்லை என்பதல்ல.
அரசாங்கத்தின் மீது எமக்கு கடுமையான விமர்சனங்கள் உள்ளன. இந்த அரசாங்கத்தில் கபினட், Clean Sri Lanka, நீதித்துறை போன்றவற்றில் சிறுபான்மை சமூகங்களுக்கு ஏற்பட்டு தொடர் புறக்கணிப்புக்கள், பலவகைமையை உறுதிப்படுத்து வதை தீர்வாக கருதாமல் ஒரே அடையாளத்திற்குள் அனைவரையும் கொண்டு வருவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கும் முயற்சிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் குறித்த நிலைப்பாட்டில் மாற்றுக் கருத்துக்கள் என்று பல்வேறு விமர்சனங்கள் எமக்கு இவ்வரசாங்கத்தின் மீது இருக்கின்றன. இவற்றை அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை கவனத்திற் கொள்ளும் ஒரு பொறிமுறையை கொண்டுவர வேண்டும்.
அப்போதுதான் அவர்களுக்கு மக்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து ஆட்சியை ஸ்திரமாக கொண்டுசெல்ல வழிவகுக்கும்" என்று தெரிவித்தார்.
இதன் போது மேலும் உரையாற்றிய சமூக நீதிக் கட்சியின் தலைவர் அர்க்கம் முனீர், இவ்வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் சமூக நீதிக் கட்சி சுயேற்சைக்குழுக்களாகப் போட்டியிடும் என்று தெரிவித்ததோடு இத்தேர்தலில் வெற்றி இலக்குகளை அடைந்து கொள்ள அனைவரின் ஆதரவையும் வேண்டிக் கொண்டார்.
இவ்வுரையின் பின்னர் மாநாட்டுத் தீர்மானங்களாக 8 தீர்மானங்கள் முன்வைக்கப் பட்டதோடு, கட்சியின் ஊடக மற்றும் கொள்கை பரப்புச் செயலாளர் அன்ஷாக் அஹமதின் நன்றியுரையோடு நிறைவுபெற்றது.

- சமூக நீதிக் கட்சி

## தமிழ் இஸ்லாமிய இலக்கியத்திற்குப் பணி செய்த மௌலவி மர்ஹூம் எம்.ஆர்.எம் நிஸாம் (பஹ்ஜி)

சிலர் மரணித்தாலும் மக்கள் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். வேறு சிலர் வாழ்ந்து கொண்டிருந்தாலும் மக்களின் உள்ளங்களிலிருந்து மரணித்திருப்பார்கள் என்று புகழ்பெற்ற இஸ்லாமிய சட்டவாக்க அறிஞர் இமாம் ஷாபி (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். எம்மை விட்டு ஆறு வருடங்களுக்கு முன்னர் மறைந்தாலும், சன்மார்க்கம் கல்வி சமூகம் இலக்கியம் ஊடகம் உட்பட பல்வேறு துறைகளுக்கு மகத்தான பங்களிப்புக்களை வழங்கிய மௌலவி மர்ஹூம் எம்.ஆர். எம் நிஸாம் (பஹ்ஜி) அவர்கள் இன்றும் மக்களால் நினைவு கூறப்படுகிறார்கள்.
1946ஆம் ஆண்டில், களுத்துறை மாவட்டத்தின் மக்கொனை நகரில் பிறந்த மர்ஹூம் நிஸ ாம் அவர்கள் காலி பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரியின் பட்டதாரி ஆவார். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியின் பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் ஒன்றரைத் தசாப்தத்திற்கு




மேலாக ஆசிரியராகப் பணியாற்றியதோடு, பின்னர் களுத்துறை மாவட்ட ஆசிரிய ஆலோசகராகவும் பணியுரிந்தார். 1975ஆம் ஆண்டு முதல் தாம் மரணிக்கும் வரை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்கும் ஏனைய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் மகத்தான பங்களிப்புகளை வழங்கி வந்தார். மௌலவி மர்ஹூம் எம். ஆர். எம் நிஸாம் அவர்களின் தமிழ் மொழிப் பயன்பாடு, அற்புமானதாகும். தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் அவருக்கு அதீத ஈடுபாடு இருந்தது. அவரது குரல் வளமும் உச்சரிப்பும் ஜனரஞ்சகத் தன்மையை ஏற்படுத்தியது. அரபுத் தமிழில் வெளியான இஸ்லாமிய இலக்கியங்களை மக்களுக்கு அறிமுகம் செய்யவும் மௌலவி நிஸாம் பஹ்ஜி பல்சேவைகளை மேற்கொண்டு ள்ளார். இஸ்லாம் பற்றிய தப்பபிப்பிராயங்களை களைவதற்கு அவர் முன்நின்று உழைத்தார். சிங்கள மொழியில் கற்கும் பாடசாலை மாணவர் களுக்கும், உலமாக்களுக்கும் இஸ்லாமிய சட்டங்கள் பற்றி விளக்கமளிப்பதற்கான மௌலவி நிஸாம் அவர்கள் ஆற்றிய பணிகள் ஏராளம் நிஸாம் மௌலவி அவர்கள் சமய, இன நல்லிணக்கத்திற்காக செய்த பணிகள் களுத்துறை மாவட்டத்திலும் இன்றும் பாராட்டப்படுகின்றன. குறிப்பாக பேருவளை, மக்கொனை, அளுத்கமை, உட்பட களுத்துறை மாவட்டத்தின் சிங்கள-முஸ்லிம் நல்லிணகத்தை மேற்கொள்வத ற்காக அவர்கள் ஆற்றிய பணிகள் இன்றும் பாராட்டப்படுகின்றன.
அல்லாஹுத்தஆலா அன்னாரின் பாவங்களை மன்னித்து மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் என்ற சுவனபதியை வழங்குவானாகவும்.

ஆமீன்.

## கலாசூரி அருந்ததி இறுதி கிரியை நாளை



கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் கடந்த 17ம் திகதி அவுஸ்திரேலியாவில் காலமான செய்தியை அனைத்து வாசகர்களும் அறிந்திருப்பீர்கள். அன்னாரது இறுதிச்சடங்குகள் இலங்கையில் நடைபெற இருக்கின்றன. குறிப்பாக அவர் சுமார் நான்கு தசாப்தங்கள் பணியாற்றிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரவேற்பு மண்டபத்தில் கடந்த 28ம் திகதி வெள்ளிக்கிழமை பி.பகல் 2மணிமுதல் 4மணிவரை அனைவரது அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. வானொலி நேயர் அனைவரும் அவரது பூவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.
அதன்பின்னர் மார்ச் 2ம் திகதி ஞாயிறு காலை 9மணி முதல் நண்பகல் 1 மணி வரை இல 4, 40ம் ஒழுங்கை வெள்ளவத்தை இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பகல் 2 மணியளவில் பொரளை, கனத்தை பொது மயாணத்தில் தகனக் கிரியை நடைபெறும்.



அரபாத் பஹர்தீன்




# ரிஸ்வான் போன்ற பைத்தியகாரரை அணியின் தலைவராக நியமித்தமையால் தான் பாக். அணிக்கு இந்த நிலை

## - சொகைப் அக்தார்

சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் விராட் கோஹ்லியின் அசத்தல் சதத்தின் மூலம் இந்திய அணி இலகு வெற்றி பெற்றிருந்தது. இதன் காரணமாக முதல் இரு போட்டிகளில் தோல்வியடைந்த நடப்புச் சம்பியனான பாகிஸ்தான் அணி முதல் சுற்றுடன் தொடரை விட்டு வெளியேறியது.

அத்துடன் கடந்த எட்டு முறை இவ் இரு அணிகளும் மோதிய போட்டியில் ஏழு போட்டியில் இந்திய அணி தான் வெற்றி பெற்றிருக்கிறது. ஒரு போட்டி மழையால் இரத்தாகி இருக்கிறது.

இப்படி பாகிஸ்தான் அணிக்கு எதிராக இந்தியா தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவது அந்நாட்டு முன்னாள் வீரர்களை ஆத்திரம் அடையச் செய்துள்ளது. இதனால் பலரும் பாகிஸ்தான் அணியில் அதிரடி மாற்றங்களை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர் சோயிப் அக்தர், "நேரலையில் ரிஸ்வானை கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி திட்டினார். இது குறித்து பேசிய அவர், வீரர்களுக்கு எதிராக எனக்கு தனிப்பட்ட முன் விரோதம் எதுவும் இல்லை."

எனக்கு மட்டும் பணம் தரவில்லை என்றால் நான் இங்கே வந்து பாகிஸ்தான் அணி குறித்து விவாதத்தில் கூட பங்கேற்று இருக்க மாட்டேன். உண்மையை சொல்ல வேண்டுமென்றால் இந்த அணி குறித்து பேசவே எனக்கு விருப்பமில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து நான் தொடர்ந்து பாகிஸ்தான் அணியில் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து பேசி முடித்து விட்டேன்."

"கடந்த 14 ஆண்டுகளாக பாகிஸ்தான் அணி சரிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ரிஸ்வான் போன்ற பைத்தியக்காரனை எல்லாம் அணியின் தலைவராக நியமித்து வினோதமான வீரர் தேர்வை செய்தால் முடிவுகள் இந்த மாதிரி தான் இருக்கும்." என்று சோயிப் அக்தர் கூறினார்.

அப்போது உடனே குறுக்கிட்ட சொகைப் மாலிக், "உங்களுக்கு இவ்வளவு கோபம் என்றால் நீங்கள் ஏன் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் இணைந்து அனைத்தையும் சரி செய்யக் கூடாது. நீங்கள் இப்படி பேசுவதற்கு பாகிஸ்தான் அணியை சரி செய்ய முன் வரலாம்." என்று கோபமாக கூறினார்.

இதற்கு கோபமாக பதில் கூறிய சொகைப் அக்தர், "நான் அனைத்தையும் துறந்து பாகிஸ்தான் அணிக்காக என்னுடைய வாழ்க்கையை தியாகம் செய்ய தயார். எனக்கு பாகிஸ்தானின் உள்நாட்டு அணியை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை கூட தாருங்கள். நான் என் குடும்பத்தை எல்லாம் விட்டுவிட்டு பாகிஸ்தான் அணிக்காக பணியாற்ற தயார். ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய விதி என்னவாகும் என்று எனக்கு தெரியும். இருந்தாலும் பரவாயில்லை." என்று சோயிப் அக்தர் பதிலளித்தார்.

நிலைமை கொஞ்சம் சிக்கலாக மாறியதை உணர்ந்த முகமது ஹபீஸ், "மூன்று ஆண்டுகள் வரை உங்களை பணியாற்ற விடுவார்களா" என்று கூற, உடனே அரங்கில் சிரிப்பலை எழுந்தது.

# பாக். மண்ணில் இலங்கைச் சாதனையை சமன் செய்தது



## நியூஸிலாந்து

பாகிஸ்தானில் நடைபெற்வரும் 9ஆவது சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் 5 விக்கெட்களினால் இலகு வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி பாகிஸ்தான் மண்ணில் இலங்கை அணியின் சாதனையை சமன் செய்தது.

சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கு முன் பாகிஸ்தான் மண்ணில் நியூசிலாந்து அணி முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடி அத் தொடரில் சம்பியன் கிண்ணத்தையும் வென்றது. இந்நிலையில் பங்களாதேஷ் அணியுடன் பெற்ற வெற்றியின் பின் பாகிஸ்தான் மண்ணில் நியூசிலாந்து தொடர்ச்சியாக பெற்ற 6ஆவது வெற்றியாக இது பதிவானது.

இதன் மூலம் பாகிஸ்தானில் தோல்வியே சந்திக்காமல் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளை பதிவு செய்த வெளிநாட்டு அணிகளின் சாதனை பட்டியலில் இலங்கையை சமன் செய்துள்ளது. இந்த சாதனையில் 7 வெற்றிகளுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியன் ஏறாவூர் அலிகாரை எதிர்கொள்ளப்போகும் கொழும்பு ஸாஹிரா



இலங்கையின் புகழ் பெற்ற முதல் 8 டிவிசன் 1 பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான ஏறாவூர் அலிகார் கல்லூரியும், கொழும்பு ஸாஹிரா கல்லூரியும் பலப்பரீட்சை நடாத்தத் தகுதி பெற்றுள்ளன.

2024 ஆம் ஆண்டுக்கான குறித்த தொடரில் பங்கேற்ற 8 அணிகளும் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் முறையில் மற்றைய அணியுடன் தலா ஒரு போட்டியில் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.

பின்னர் லீக் சுற்று முடிவில் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகி பின்னர் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வகையில் இடம்பெற்ற பே-ாட்டிகளில் குழு ஏ இல் முதலிடம் பிடித்த ஏறாவூர் அலிகார் கல்லூரியும் சென் ஜோசப் கல்லூரியும் அரையிறுதிக்குத் தகுதி பெற, குழு பி இல் இருந்து கொழும்பு ஸாஹிரா கல்லூரியும், கொழும்பு ஹமீத் அல் ஹு்சைனி கல்லூரியும் தகுதி பெற்றன.



இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் குழு ஏ இல் முதலிடம் பெற்ற ஏறாவூர் அலிகார் கல்லூரியும், குழு பில் இரண்டாம் இடம்பெற்ற கொழும்பு ஹமீத் அல் ஹு்சைனி கல்லூரியும் பலப்பரீட்சை நடாத்தின.

விறுவிறுப்பிற்கு பஞ்சமின்றி இடம்பெற்ற ஆட்டத்தின் முதல் பாதியின் இறுதி நிமிடமான 44ஆவது நிமிடத்தில் வைத்து அலிகார் கல்லூரிக்கு ஃப்ரீ கிக் வாய்ப்பு கிடைத்தது. அதனை அவ் அணியின் நட்சத்திர வீரரான முன்ஷிப் பொறுப்பேற்று இடக்காலால் கம்பம் நோக்கி அடிக்க பந்து மின்னல் வேகத்தில் கம்பத்தின் மேல் புறத்தில் ஊடாக உட்செல்ல முதல் பாதியை 1:0 என முடித்துக் கொண்டது அலிகார் கல்லூரி.

பின்னர் இடம்பெற்ற தீர்க்கமான 2ஆவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோலுக்கான போராட்டத்தை அதிகப்படுத்தினர். இருப்பினும் இரு அணிகளினதும் பின்கள வீரர்களின் அசத்தலான ஆட்டத்தால் மேலதீக கோல்கள் உட்செலுத்த முடியாமல் போக போட்டியில் 1:0 என வெற்றி பெற்ற ஏறாவூர் அலிகார் கல்லூரி அணி மீண்டும் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் குழு பி இல் முதலிடம் பிடித்த கொழும்பு ஸாஹிரா கல்லூரியும், குழு ஏ இல் 2ஆம் இடம் பிடித்த சென் ஜோஸப் கல்லூரி அணியும் பலப்பரீட்சை நடாத்தின. இப்போட்டியின் முதல் கோலினை சென் ஜோஸப் கல்லூரி உட்செலுத்தி ஆதிக்கம் செலுத்திய போதிலும் , ஆட்டத்தின் இறுதி கட்டத்தில் ஸாஹிரா கல்லூரி பதில் கோல் அடிக்க முழு நேர ஆட்டம் 1:1 என சமநிலை பெற்றது. இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி உதை வழங்கப்பட அதில் 4:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்ற கொழும்பு ஸாஹிரா கல்லூரி இறுதிப் போட்டிக்குள் மீண்டும் தடம் பதித்தது.

அதற்கமைய தீர்மாணமிக்க இறுதிப் போட்டி வியாழக்கிழமை (27) இரவு 8 மணிக்கு மின்னொளியில் கொழும்பு ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளதுடன், இவ் இறுதிப் போட்டியில் கடந்த வருடம் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடாத்திய அதே இரு பாடசாலை அணிக்கான ஏறாவூர் அலிகார் மற்றும் கொழும்பு ஸாஹிரா ஆகிய கல்லூரிகள் இம் முறையும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.